இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 132 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 6 – வெள்ளிக்கிழமை 22 டிசம்பர் 2023 – வெளியூர் 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 132 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 6 - Friday 22 December 2023 - Dak 10 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (21.12.2023) அதி கனமழையால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்ட தூத்துக்குடிக்கு நேரில் சென்று, குறிஞ்சி நகர் போல் பேட்டை பகுதியில் வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் என்.பி. ஜெகன், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே. பிரபாகர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் ஜி. லட்சுமிபதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (21.12.2023) அதி கனமழையால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்ட தூத்துக்குடிக்கு நேரில் சென்று, மறவன் மடம் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து, வெள்ள சேத விவரங்களையும், அவர்களது கோரிக்கைகளையும் கேட்டறிந்து, அவர்களிடம் மனுக்களைப் பெற்றுக் கொண்டார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் ஜி. லட்சுமிபதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட

# தூத்துக்குடியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!

## மீட்பு - நிவாரணப் பணிகளை விரைந்து நிறைவேற்றிட உத்தரவு !

**தூத்துக்குடி, டிச.22-**

**அதி கனமழையால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டத்திற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று நேரில் சென்று வெள்ளப் பாதிப்புகளை ஆய்வு செய்து, பொது மக்களுக்கு ஆறுதல் கூறி, நிவாரண உதவிகளை வழங்கி, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை விரைந்து முடித்திட உத்தரவிட்டார்.**

அதன் விபரம் வருமாறு:–

தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் டிசம்பர் 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் பெய்த அதிகனமழையின் காரணமாக ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ளப் பாதிப்புகளை எதிர்கொள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்படி, வெள்ள பாதிப்புகளைச் சீர் செய்திடவும், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளவும், அமைச்சர் பெருமக்கள் நியமிக்கப்பட்டு, அவர்களுடன் இணைந்து நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் பணி மேற்கொண்டு வருகின்றனர்.

**மீட்புப் பணிகளில் அமைச்சர்கள்– ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமனம்!**

கனமழையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள தூத்துக்குடி மாவட்டத்திற்கு கூடுதலாக அமைச்சர்கள் மற்றும் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் நியமிக்கப் பட்டு, அவர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து மீட்புப் பணிகளை மேற்கொள்ளுதல், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்குதல், மக்களுக்கு வேண்டிய மருத்துவ உதவிகளை வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

> **“தூத்துக்குடி, மறவன் மடம் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களை முதலமைச்சர் அவர்கள் சந்தித்து, வெள்ளச் சேத விவரங்களையும், அவர்களது கோரிக்கைகளையும் கேட்டறிந்து, அவர்களிடம் மனுக்களைப் பெற்றுக் கொண்டார். அப்போது, “பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் உரிய நிவாரண உதவிகள் வழங்கப்படும்” என்று தெரிவித்தார்.”**

**பிரதமரிடம் – முதல்வர் கோரிக்கை மனு!**

இந்நிலையில், முதலமைச்சர் அவர்கள் 19.12.2023 அன்று இந்தியப் பிரதமர் அவர்களை புதுடெல்லியில் சந்தித்து, தென் மாவட்டங்களில் வரலாறு காணாத வகையில் 100 ஆண்டுகள் இல்லாத கனமழை பெய்ததால் ஏற்பட்ட பாதிப்புகளை விளக்கி, இதனை தேசியப் பேரிடராக அறிவிக்க வேண்டும் என்றும், பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 2000 கோடி ரூபாயை அவசர நிவாரண நிதியாக வாழ்வாதார உதவிக்காகவும், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்களின் தற்காலிக சீரமைப்புப் பணிகளுக்காகவும் வழங்கிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு கோரிக்கை மனு அளித்தார்.

புதுடெல்லியிருந்து நேற்று முன்தினம் (20.12.2023) காலை சென்னை திரும்பிய முதலமைச்சர் அவர்கள், சென்னை, எழிலகத்திலுள்ள, மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்குச் சென்று அங்கு தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணப் பணிகள் குறித்தும், மீட்புப் பணிகளின் நிலை குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

**மீட்பு நடவடிக்கை குறித்து மாவட்ட ஆட்சியர்களிடம் கேட்டறிந்தார்!**

மேலும், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர்களுடனும், வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் கண்காணிப்பு அலுவலர்களுடன் காணொலி வாயிலாக ஆய்வு கொண்டு, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்தும், நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள், மருத்துவ உதவிகள் வழங்கப்படுவது குறித்தும், வெள்ளம் சூழ்ந்து சென்றடைய முடியாத நிலையில் உள்ள கிராமங்களில் உள்ள மக்களை மீட்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்து, உரிய அறிவுரைகளை வழங்கினார்.

**தொடர்ச்சி 3 ஆம் பக்கம்**

## சஸ்பெண்ட் செய்யப்பட்ட

# எதிர்க்கட்சி எம்.பி.க்கள் போராட்டம்!

### நாடாளுமன்ற வளாகத்தில் காந்தி சிலை முன்பு கண்டன முழக்கம்!

*புதுடெல்லி, டிச. 22-*

*மக்களவையில் புகைக் குண்டு வீச்சுக்கு எதிராக குரல் எழுப்பியவர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டதைக் கண்டித்து, நாடாளுமன்ற வளாகத்தில் எம்.பி.க்கள் நேற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.*

*மக்களவையில் புகைக் குண்டு வீசப்பட்ட நிகழ்வு குறித்தும், நாடாளுமன்ற பாதுகாப்பு குளறுபடி குறித்தும் பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் விளக்கம் அளிக்க வேண்டும் எனக் கோரி நாடாளுமன்றத்தில் முழக்கமிட்டதற்காக 143 எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டனர். இதற்கு ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.*

*நாடாளுமன்ற பாதுகாப்பை உறுதி செய்யக் கோரியும், எம்.பி.க்களின் இடை நீக்கத்தை ரத்து செய்ய வலியுறுத்தியும் நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.*

*அந்த வகையில் நேற்று காலையிலும் போராட்டம் நடைபெற்றது. நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள காந்தி சிலையில் இருந்து எம்.பி.க்கள் பேரணியாகச் சென்று தங்களது எதிர்ப்பை பதிவு செய்தனர்.*

**இன்று நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம்!**

*போராட்டத்தில் பங்கேற்ற பின் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, எம்.பி.க்கள் இடைநீக்கத்தை கண்டித்து இந்தியா கூட்டணி சார்பில் இன்று (22.12.2023) நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று தெரிவித்தார். டெல்லி ஜந்தர் மந்தரில் இந்தியா கூட்டணி போராட்டம் நடத்தும் என்றும் அவர் கூறினார்.*

**திருச்சி சிவா எம்.பி. குற்றச்சாட்டு!**

*போராட்டத்தில் பங்கேற்ற பின் செய்தியாளர்களிடம் பேசிய மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா, நாடாளுமன்ற பாதுகாப்பு விவகாரத்தில் ஒன்றிய அரசு பதிலளிக்க மறுப்பது ஏன் என்று வினவினார். அவைகளில் உறுப்பினர்களை பேச அனுமதிப்பதில்லை என்றும் அவர் சாடினார்.*

*நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நிகழ்வு குறித்து உள்துறை அமைச்சர் விளக்கம் அளிக்க வேண்டும் என்றுதான் கேட்கிறோம்.*

*ஆனால், எங்கள் கோரிக்கையை சபாநாயகரும், ஒன்றிய அரசும் ஏற்கவில்லை அவையில் எங்கள் கருத்துக்களை தெரிவிக்க அனுமதிக்க வேண்டும் என்று கேட்கிறோம்.*

*ஆனால் அதையும் ஏற்கவில்லை ஒன்றிய அரசு அறிக்கை மூலம் விளக்கம் அளிக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் கோருவது நியாயமான ஒன்றுதான்*

*இதற்காக 143 எம்.பி.க்களை இடைநீக்கம் செய்துள்ளனர். இதற்கு எதிராகத்தான் இன்றைக்கு இந்த போராட்டம் நடைபெறுகிறது.*

## பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்

# ஆர்.எஸ்.இராஜகண்ணப்பனுக்கு கூடுதலாக - உயர்கல்வித்துறை

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு

**சென்னை, டிச. 22-**

**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.இராஜ கண்ணப்பனுக்கு, உயர்கல்வித்துறை கூடுதல் பொறுப்பாக ஒதுக்கப்பட்டுள்ளது.**

**தமிழ்நாடு அமைச்சரவையில் ஆர்.எஸ்.இராஜகண்ணப்பன் கவனித்து வந்த கதர் துறை, கைத்தறித் துறை அமைச்சர் ஆர்.காந்திக்கு மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.**



அதன் விபரம் வருமாறு:–

தமிழ்நாடு அமைச்சரவையில் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சராக உள்ளார். இந்நிலையில், அவருக்கு நேற்று– உயர்கல்வித்துறையினை கூடுதல் பொறுப்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்.

மேலும் – இராஜகண்ணப்பன் வசம் இருந்த கதர் துறை, அமைச்சர் ஆர்.காந்திக்கு கூடுதல் பொறுப்பாக வழங்கப்பட்டுள்ளது.

அவர், தாம் ஏற்கனவே வைத்துள்ள கைத்தறித் துறையுடன் சேர்த்து கதர்துறையையும் கவனிப்பார் எனவும், முதல்வரின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அமைச்சரவையில் செய்யப்பட்டுள்ள இவ்விரு மாறுதல்கள் தொடர்பாக ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார். அளுநரும் அதனை ஏற்று அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இவ்விரு அமைச்சர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட துறைகள் விபரம்:

**ஆர்.எஸ்.இராஜகண்ணப்பன்:**

**உயர்கல்வித்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை**

(பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன்)

**ஆர்.காந்தி:**

**கைத்தறி மற்றும் கதர்த்துறை**

(கைத்தறி, துணி நூல் துறை, பூதானம், கிராமதானம், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம்)

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 22-12-2023

# டெல்லியில் 'இந்தியா'

**இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள பேராபத்து பா.ஜ.க.**

**இந்தியாவைக் காப்பாற்ற வந்திருக்கும் ஆபத்பாந்தவன் 'இந்தியா' கூட்டணி. இந்தக் கூட்டணியின் வெற்றியில்தான் 'இந்தியா'வின் எதிர்காலம் அடங்கி இருக்கிறது.**

2014 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பா.ஜ.க., 2019 ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் ஒட்டுமொத்த இந்தியாவில் நம்மை எதிர்க்க இனி யாரும் இல்லை என்ற மிதப்பில் கெட்ட ஆட்டம் ஆடி வந்தது. ஆனால் அது அடைந்ததோ அதிகமாக தோல்விகளைத்தான்.

கடந்த ஏழு ஆண்டு காலத்தில் பல்வேறு மாநில சட்டசபைத் தேர்தல்களில் பா.ஜ.க. தோல்வியை அடைந்துள்ளது. தமிழ்நாட்டில் தோல்வி, கேரளாவில் தோல்வி, பீகாரில் தோல்வி, மேற்கு வங்கத்தில் தோல்வி, ஜார்கண்ட் மாநிலத்தில் தோல்வி, ஒடிசாவில் தோல்வி, சட்டீஸ்கரிலும் தோல்வி, தெலுங்கானாவில் தோல்வி, ஆந்திராவில் தோல்வி, பஞ்சாப் மாநிலத்தில் இரண்டு முறை தோல்வி, டெல்லியில் இரண்டு முறை தோல்வி, ராஜஸ்தானில் தோல்வி - என சட்டமன்றத் தேர்தல்களில் தோற்ற கட்சிதான் பா.ஜ.க.

கடந்த செப்டம்பர் மாதம் நடந்த பல்வேறு இடைத் தேர்தல்களில் 'இந்தியா' கூட்டணிக் கட்சிகள் வெற்றி பெற்றன. 6 மாநிலங்களில் உள்ள 7 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அது. உத்தரப்பிரதேச மாநிலம் கோசி தொகுதியை சமாஜ்வாதி கட்சியும், கேரள மாநிலத்தில் உள்ள புதுப்பள்ளி தொகுதியை காங்கிரஸ் கட்சியும், மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள துப்குரி தொகுதியை திரிணாமூல் காங்கிரஸ் கட்சியும், ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள தும்ரி தொகுதியை ஜார்கண்ட் முக்தி மோர்ச்சாவும் கைப்பற்றியது. காங்கிரஸ், சமாஜ்வாதி, திரிணாமூல் காங்கிரஸ், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா ஆகியவை 'இந்தியா' கூட்டணியில் இடம்பெற்றுள்ள முக்கிய கட்சிகள் ஆகும்.

கடந்த மே மாதம் நடந்த கர்நாடக மாநிலத் தேர்தலில் பா.ஜ.க. தோற்றது. லடாக் கார்கில் தன்னாட்சி மலை மேம்பாட்டு கவுன்சிலுக்கு நடைபெற்ற தேர்தலில், 'இந்தியா' கூட்டணி மாபெரும் வெற்றி பெற்றுள்ளது. 1 இடத்தை மட்டும் வெற்றி பெற்று பா.ஜ.க. படுதோல்வியடைந்துள்ளது.

இப்போதுதான் மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான், சட்டீஸ்கர் ஆகிய மூன்று மாநிலங்களில் வெற்றி பெற்றுள்ளது. இந்த வெற்றியும் மாபெரும் வெற்றி அல்ல என்பதை பா.ஜ.க. வாங்கிய புள்ளிவிபரங்களே சொல்லும்.

ராஜஸ்தான் மாநிலத்தில் பா.ஜ.க. வென்றிருந்தாலும், காங்கிரஸ் கட்சிக்கும் பா.ஜ.க.வுக்குமான வாக்கு வித்தியாசம் 10 லட்சம் பேர்தான். சட்டீஸ்கரில் 6 லட்சம் வாக்குகள்தான். மத்தியப் பிரதேசத்தில் மட்டும்தான் 35 லட்சம் வாக்குகளை கூடுதலாக பா.ஜ.க. பெற்றுள்ளது. ராஜஸ்தானில் காங்கிரஸுக்கும் பா.ஜ.க.வுக்கும் 2 விழுக்காடு வாக்குகள்தான் வேறுபாடு. சட்டீஸ்கரில் 4 விழுக்காடு, மத்தியப் பிரதேசத்தில் 8 விழுக்காடு வாக்குகள் வேறுபாடு ஆகும். தெலுங்கானாவில் பா.ஜ.க.வை விட 26 விழுக்காடு அதிகமான வாக்குகளை காங்கிரஸ் பெற்றுள்ளது. தெலுங்கானாவில் பா.ஜ.க. அடைந்த மாபெரும் தோல்வியை மற்ற மாநிலங்களில் காங்கிரஸ் அடைந்துவிடவில்லை என்றே சொல்ல வேண்டும். பா.ஜ.க.வை தெலுங்கானா நிராகரித்திருக்கிறது. மிசோரமில் பா.ஜ.க.வின் கூட்டணிக் கட்சியே பா.ஜ.க.வை நிராகரித்தது. அபரிதமான - மகத்தான வெற்றி என்று சொல்லத்தக்க வாக்குகளை பா.ஜ.க. பெறவில்லை.

**பா.ஜ.க.வுக்கு எதிரான வாக்குகளை ஒருமுகப்படுத்தினால் நிச்சயம் பா.ஜ.க.வை வீழ்த்த முடியும் என்பதே முழுமுதல் உண்மை ஆகும். இதற்காகவே 'இந்தியா' கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது.**

பாட்னா, பெங்களூரு, மும்பை ஆகிய நகரங்களில் நடந்த 'இந்தியா' கூட்டணிக் கட்சிகளின் கூட்டம் கடந்த 19 ஆம் தேதி அன்று டெல்லியில் நடந்துள்ளது. இக்கூட்டமானது முக்கியமான நகர்வை எட்டி இருக்கிறது. பா.ஜ.க.வை வீழ்த்தும் நோக்கத்தைக் கொண்ட கட்சிகள் அனைத்தும் சேர்ந்து கூட்டணி அமைத்துப் போட்டியிடுவது என இக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இக்கூட்டணிப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு காங்கிரஸ் கட்சி ஐவர் குழுவை அமைத்துள்ளது.

**பாட்னாவில் நடந்த முதல் கூட்டத்தில் இருந்து இதனை தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தி வந்துள்ளார்கள். "தமிழ்நாட்டில் நாங்கள் கூட்டணி அமைத்து போட்டியிட்டதைப் போல மாநில அளவில் 'இந்தியா' கூட்டணியானது ஒன்றுபட்டுப் போட்டியிட வேண்டும். எந்த மாநிலத்தில் எந்தக் கட்சி செல்வாக்குடன் இருக்கிறதோ அந்தக் கட்சி தலைமையில் கூட்டணி அமைத்துக் கொள்ளலாம். தொகுதிப் பங்கீடுகளைச் செய்து கொள்ளலாம். இந்தக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் இரண்டு கட்சிகள் - ஒரு மாநிலத்தில் சம விகித செல்வாக்குடன் இருந்தால் அந்த மாநிலங்களில் கூட்டணித் தலைமை என இல்லாமல் தொகுதிப் பங்கீடு என்ற வகையில் பங்கீடுகளைச் செய்து கொள்ளலாம். ஒரு கட்சித் தலைமையில் கூட்டணி - தொகுதிப் பங்கீடு ஆகியவை செய்ய முடியாத அளவுக்கு இரண்டு கட்சிகளுக்குள் கொள்கை மோதல் இருக்குமானால் பொது வேட்பாளர் என்பதை அறிவிக்க வேண்டும். எங்கும் எந்தச் சூழலிலும் மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சிகளின் அரசியல் இலக்குக்கு எந்தவொரு தொகுதியிலும் இடையூறு ஏற்படக் கூடாது. அதில் கவனமாக இருக்க வேண்டும். நமது அணியில் சேராத - ஆனால் பா.ஜ.க.வை கடுமையாக எதிர்க்கும் மற்றக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். பா.ஜ.க.வை தனிமைப் படுத்தும் வகையில் - பா.ஜ.க.வுக்கு எதிரான கட்சிகளை முடிந்தவரை இந்த அணியில் சேர்த்தாக வேண்டும்" என்பதை மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தி வந்தார்கள். இதற்கான ஒரு வடிவத்தை டெல்லியில் நடைபெற்ற 'இந்தியா' கூட்டணிக் கட்சிகளின் கூட்டம் எட்டியுள்ளது.**

'மாநில ரீதியாக பேச்சுவார்த்தையைத் தொடங்குவோம். ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் 'இந்தியா' கூட்டணி தீர்வு காணும்' என்று அகில இந்திய காங்கிரஸ் தலைவர் கார்கேவும் தெளிவுபடுத்தி விட்டார். தொகுதிப் பங்கீட்டை உடனடியாகத் தொடங்க வேண்டும் என்று மம்தாவும் கோரிக்கை வைத்தார். இதனை கூட்டணித் தலைவர்கள் அனைவரும் ஏற்றுச் செயல்படத் தொடங்கி விட்டார்கள்.

**டெல்லியை அடைந்துள்ளது 'இந்தியா' கூட்டணி.**

**இந்தியாவை வெல்லும் 'இந்தியா' கூட்டணி.**



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அவர்கள் நேற்று முன்தினம் (20.12.2023) சென்னை குருநானக் கல்லூரி வளாகத்தில் ஷாஹித் பகத் சிங் விளையாட்டு வளாகம் மற்றும் சரகர்ஹி துப்பாக்கி சுடுதல் விளையாட்டுப் பயிற்சி மையத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, குரு நானக் கல்வி குழுமத்தின் தலைவர் ரஜிந்தர் சிங் பாசின் ஆகியோர் உடனிருந்தனர்.

# தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் 'கிறிஸ்துமஸ் பெருவிழா'

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று நடைபெறுகிறது!

சென்னை, டிச. 22 -

தி.மு.க. சிறுபான்மை நல உரிமைப் பிரிவு சார்பில் அன்பின் இனிய கிறிஸ்துமஸ் பெருவிழா இன்று (22.12.2023 - வெள்ளிக்கிழமை) மாலை 4 மணிக்கு பெரம்பூர் தொன்போஸ்கோ பள்ளி வளாகத்தில் நடைபெறுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விழாவிற்கு தலைமையேற்று சிறப்புரையாற்றுகிறார்.

இதில் அணிச் செயலாளர் சுபேர்கான் வரவேற்புரையாற்றுகிறார். தமிழ்நாடு சிறுபான்மை ஆணைய தலைவர் பீட்டர் அல்போன்ஸ், கிறிஸ்தவ நல்லெண்ண இயக்கத் தலைவர் இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ., பிரதம பேராயர் ஏ.ஜே.டேவிட் ஓனேசிமு, தென்னிந்திய திருச்சபை பேராயர் திருச்சி சந்திரசேகர், நீதியரசர் என்.பாஷா, பெந்தகோஸ்தோ சபைகளின் தேசிய பேராயர் கே.பி.எடிசன், பாதர் ஜெயபாலன், பாதர் அந்தோணி ராபின்சன், அமலமரி புதல்வியர் சபை அருள்சீலி, சிவஞான பாலய சுவாமிகள், ஜெயந்திலால் செலாணி ஆகியோர் பங்கேற்கின்றனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு நன்றி கூறுகிறார்.

நிகழ்ச்சியை பேராயர் து.ரேவதி கிருபாகரன் தொகுத்து வழங்குகிறார். துதி இயேசுவுக்கே ஊழியங்கள் பிலிப் நெல்சன் பாடல் குழுவினர் இசை நிகழ்ச்சி நடத்துகின்றனர்.

## கடல் மட்டத்திலிருந்து 3610 அடி உயரத்தில் உள்ள

# கொடக்கரை மலைக்கிராமத்தில் "மக்களைத் தேடி மருத்துவம்' திட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் களஆய்வு!

கிருஷ்ணகிரி, டிச. 22 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (20.12.2023) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி வட்டத்தில் உள்ள கடல் மட்டத்திலிருந்து 1100 மீட்டர் (3610 அடி) உயரத்தில் உள்ள கொடக்கரை மலைக் கிராமத்திற்கு 10 கி.மீ நடந்து சென்று அங்குள்ள பழங்குடியினர் மக்களை நேரில் சந்தித்து அவர்களுக்கு மருத்துவத்துறை சார்பாக வழங்கப்படும் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் குறித்து ஆய்வு மேற்கொண்டார். அங்குள்ள பழங்குடியினர் மக்களிடம் கலந்துரையாடி வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும் குழந்தை திருமணம் பற்றிய பாதிப்புகளை எடுத்துரைத்து விழிப்புணர்வு உரையாற்றினார். அங்குள்ள அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு சிறப்பான முறையில் செயல்படும் காலை உணவு திட்டத்தை ஆய்வு மேற்கொண்டு மாணவர்களுடன் உணவு அருந்தினார். இந்நிகழ்விற்கு பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

கொடக்கரை என்கின்ற மலைக்கிராமத்தில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்வதற்கு இன்று காலை இக்கிராமத்திற்கு வந்திருக்கிறோம். மேலும் இக்கிராமத்திற்கு மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்திற்கான முகாம் நடத்தப்பட்டது. இக்கிராமத்தில் உள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது. இப்பகுதி மக்களுக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டு அவர்களுக்கு கண் கண்ணாடி வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டுள்ளது. மலைக்கிராமங்களுக்கு 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அருகில் உள்ள மலைக்கிராமமான பெட்டமுகிலா மற்றும் அதை ஒட்டியுள்ள 8க்கும் மேற்பட்ட மலைக் கிராமங்களில் நேரிடையாக சென்று பார்த்து அப்பகுதி மக்களின் தேவைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று உருவாக்கப்பட்டது தான் மக்களைத் தேடி மருத்துவம் என்கின்ற மகத்தான திட்டம். இத்திட்டத்தின்படி, இன்று வரை 1,00,67,000 பேர் அவரவர் வீடுகளில் இருந்து சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், பிசியோதெரபி, டயாலிசிஸ் போன்ற 5 வகை நோய்களுக்கு சிகிச்சை களும், மருந்து பெட்டகங்களும் தருகின்ற திட்டம் மிகச் சிறப்பான வெற்றியை பெற்றிருக்கிறது. மேலும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கொடக்கரை என்கின்ற மலைக்கிராமம் மற்றும் அதையொட்டியுள்ள மலைக் கிராமங்களில் இன்று ஆய்வு செய்தோம். பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள வீடுகள் 20 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டு பெரிய அளவில் சேதமடைந்து இருக்கின்றது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று, தமிழ்நாடு வனத்துறை சார்பில் வீடுகளை சீரமைக்கப்படும் என்கின்ற உறுதியினை தந்திருக்கிறோம். இவர்களுக்கு துணை சுகாதார வசதிகள் வேண்டும் என்றால் சுற்றி 100 கி.மீ தூரம் உள்ள தொட்டமஞ்சி என்கின்ற துணை சுகாதார நிலையத்திற்கு சென்று மருத்துவ வசதி பெற வேண்டியுள்ளது. சாலை வசதிகள் என்றால் 100 கி.மீ தொலைவில் செல்ல வேண்டும் என்கின்ற நிலையில் தற்போது இவர்கள் இங்கு ஒரு துணை சுகாதார நிலையம் வேண்டும் என்கின்ற கோரிக்கையினை வைத்திருக்கிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று நிச்சயம் ஒரு துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். கடந்த ஆண்டு இப்பகுதிக்கு வந்த போது ஒரு ஆம்புலன்ஸ் சேவை வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2021 ஆகஸ்ட் 5 ஆம் நாள் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் தொடங்கப்பட்டபோது பெட்டமுகிலா பகுதிக்கு ஆம்புலன்ஸ் வழங்கப்பட்டது. இந்த ஆம்புலன்ஸ் மூலம் சுற்றியிருக்கும் 30க்கும் மேற்பட்ட மலைக்கிராம மக்கள் பயன்பெற்று வருகிறார்கள். இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் குழந்தை திருமணம் குறித்தான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும் அருகில் உள்ள கொச்சாவூர் மலைக்கிராமத்தில் உள்ள தொடக்கப்பள்ளியில் ஆய்வு செய்தோம். இங்கு 56 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். அப்பள்ளி தலைமையாசிரியர் மிக்க மகிழ்ச்சியோடு தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவு திட்டம் செயல்பாட்டு வந்தவுடன் மாணவர்கள் காலை நேரத்தில் குறித்த நேரத்திற்கு பள்ளிக்கு வருகிறார்கள் என்றும் கல்வி கற்றுக் கொள்ளும் திறன் அதிகரித்து இருக்கிறது என்றும் மேலும், பழங்குடியினர் சமூகத்தைச் சேர்ந்த குழந்தைகள் பள்ளிக்கு இடைநிற்றல் இல்லாமல் பள்ளிக்கு வருகின்ற நிலை இருக்கிறது என்றும் மகிழ்ச்சியோடு தெரிவித்தார்கள். மேலும் அப்பள்ளி மாணவர்களுடன் காலை சிற்றுண்டி அருந்துவதற்கான வாய்ப்பும் இன்று கிடைத்திருக்கிறது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

## அரசின் திட்டங்கள் முழு அளவில் நிறைவேற

# அதிகாரிகளுடன் மக்கள் பிரதிநிதிகள் இணைந்து செயல்பட வேண்டும்!

## அமைச்சர் பெரியகருப்பன் பேச்சு!

*சிவகங்கை, டிச. 22-*

*சிவகங்கை நகராட்சி சார்பில் தமிழக முதல்வர் அறிவித்துள்ள மக்களுடன் முதல்வர் திட்ட துவக்க விழா மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது. சிவகங்கை கோட்டாட்சியர் திருமதி சுகிதா வரவேற்றுப் பேசினார்.*

*நிகழ்ச்சியில் முதல்வரின் 'மக்களுடன் முதல்வர்' திட்டத்தினை துவக்கி வைத்து கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசியதாவது:-*

*தமிழ்நாடு முதல்வராக தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற இரண்டரை ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். இத்திட்டங்களின் முத்தான திட்டமான முதல்வருடன் மக்கள் திட்டத்தை இன்று துவக்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இத்திட்டத்தின் மூலம் மக்களின் குறைகள், பிரச்சினைகள் கேட்கப்பட்டு முப்பது நாட்களில் உடனடியாக தீர்வு காணப்படும். சிவகங்கை நகரில் 27 வார்டுகளுக்கு 5 மையங்களில் இந்த முகாம் நடைபெற்று வருகிறது.*

*இந்த முகாமில் மனு கொடுத்தவர்கள் மனு மீது நடவடிக்கை எடுப்பதற்காக அனைத்துத் துறை அதிகாரிகளும் இங்கு ஒரே இடத்தில் வந்துள்ளார்கள். இந்த நாளில் மனுக்கள் கொடுப்பதால் பிரச்சினை எளிதில் தீர்க்கப்படும். தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் உடனடியாக தீர்வு காணப்படும். இது ஒரு முத்தாய்ப்பான முதல்வரின் முன்னுரிமையான திட்டம் ஆகும். அரசின் திட்டங்கள் முழுமையாக நிறைவேற உள்ளாட்சிப் பிரதிநிதிகள் அதிகாரிகளுடன் இணைந்து செயல்பட வேண்டும். அதன் மூலம் இத்திட்டம் முழு அளவில் நிறைவேறும்.*

*இந்த திட்டத்தின் மூலம் நகராட்சி நிர்வாக துறை, கூட்டுறவு துறை, உள்ளாட்சித் துறை, காவல் துறை, வருவாய்த்துறை மற்றும் அனைத்துத் துறை அதிகாரிகளும் முகாமிட்டுள்ளார்கள். இந்த வாய்ப்பினை பொது மக்கள் நன்றாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.*

*இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார்.*

*நிகழ்ச்சியில் திருப்புவனம் பேரூராட்சி தலைவர் த.சேங்கைமாறன், சிவகங்கை நகர்மன்றத் தலைவர் சி.எம். துரை ஆனந்த், காஞ்சி ரங்கால் ஊராட்சி மன்றத் தலைவர் கே.எஸ்.எம்.மணி முத்து ஆகியோர் வாழ்த்திப் பேசினார்.*

*இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், நகராட்சி ஆணையர் வேங்கடலட்சுமணன், ஒன்றியச் செயலாளர்கள் திருமலை முத்துராமலிங்கம், எம்.ஜெயராமன், யோக. கிருஷ்ணகுமார், கவுன்சிலர்கள் மதியழகன், வீனஸ்ராமநாதன், பாக்கியலட்சுமி விஜயக்குமார், ஜெயகாந்தன், மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் திலகவதி கண்ணன், நிர்வாகிகள் நகர் மன்ற துணைத் தலைவர் எம்.கார்கண்ணன், மதார், இளைஞரணி அரிகரன், சேகர், அண்ணாமலை மாரி, சேவியர், சோமசுந்தரம் தொ.மு.ச. முருகேசன், ஒன்றியத் துணைச் செயலாளர் முத்துகுமார், ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.*

*நேற்று முன்தினம் ஐந்து இடங்களில் நடைபெற்ற முகாம்களில் 800க்கும் மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டது. மனுவில் பட்டா மாறுதல், வரி விதிப்பு, குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி போன்ற கோரிக்கைகளை மனுவாக கொடுத்தார்கள்.*

*தாசில்தார் சிவராமன் நன்றி கூறினார்.*



தருமபுரி மாவட்டம் பாலக்கோடு திம்மனஹள்ளியில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலையின் கரும்பு அரவை பணியினை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன், முன்னாள் அமைச்சர், தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர். பி.பழனியப்பன், முன்னாள் எம்.எல்.ஏ., தருமபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி,பேரூராட்சித் தலைவர் பி.கே.முரளி,நெசவாளர் அணி அமைப்பாளர் ராஜபார்ட் ரங்கதுரை, விவசாய அணி துணை அமைப்பாளர் ஏ.வி.குமார், ஆலை மேலாண்மை இயக்குனர் யோகாவிஷ்ணு மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடியில் முதல்வர் நேரில் ஆய்வு...

... முதல் பக்கத் தொடர்ச்சி

அதன் தொடர்ச்சியாக, அதி கனம ழையால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களுக்கு நேரில் சென்று, அங்கு மேற்கொள்ளப்பட்டுள்ள மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்வதற்காக நேற்று (21.12.2023) காலை முதலமைச்சர் அவர்கள் தூத்துக்குடி சென்றடைந்தார்.

தூத்துக்குடி, மறவன் மடம் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களை முதலமைச்சர் அவர்கள் சந்தித்து, வெள்ளச் சேத விவரங்களையும், அவர்களது கோரிக்கைகளையும் கேட்டறிந்து, அவர்களிடம் மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

அப்போது, "பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் உரிய நிவாரண உதவிகள் வழங்கப்படும்" என்று தெரிவித்தார்.

**பாலம் சீரமைக்கும் பணி முதல்வர் பார்வையிட்டார்!**

அதனைத் தொடர்ந்து, மறவன் மடம் பகுதியில் வெள்ளத்தால் சேதமடைந்த பாலத்தைச் சீரமைக்கும் பணிகளைப் பார்வையிட்டார்.

டிசம்பர் 17-ஆம் தேதி அதிகன மழை பெய்யத் தொடங்கியவுடன், 18-ஆம் தேதி முதல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மில்லர்புரம், பிரையன்ட் நகர், அண்ணா நகர், டீச்சர்ஸ் காலனி, ராஜீவ் நகர், சீலோன் காலனி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் சுமார் 600 பேர் செயின்ட் மேரிஸ் பள்ளியில் உள்ள நிவாரண மையத்தில் பாதுகாப்பாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு மூன்று வேளை உணவும், மருந்து, பால் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அந்நிவாரண மையத்தில் நடத்தப்படும் மருத்துவ முகாமில் காய்ச்சல், இருமல், சளி, வயிற்றுப்போக்கு போன்றவற்றிற்கான சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

**முகாம்களில் உள்ள மக்களுக்கு நிவாரண உதவிகள்!**

முதலமைச்சர் அவர்கள், செயின்ட் மேரீஸ் பள்ளியில் உள்ள நிவாரண மையத்திற்குச் சென்று, அங்கு தங்க வைக்கப்பட்டுள்ள மக்களிடம் அவர்களுக்குச் செய்து தரப்பட்டுள்ள வசதிகள் குறித்துக் கேட்டறிந்து, முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு அரிசி, வேட்டி, சேலை, போர்வை, பாய், பிஸ்கட் மற்றும் ரொட்டி, பால் பவுடர், தண்ணீர் பாட்டில் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, எட்டையபுரம் 3-வது கேட் மேம்பாலத்திலிருந்து வெள்ளம் சூழ்ந்த பகுதிகளை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, வெள்ள நீரை அகற்றிட துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

**வெள்ள நீரை அகற்ற அதிகாரிகளுக்கு உத்தரவு!**

பின்னர், குறிஞ்சி நகர் போல்பேட்டையில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியைப் பார்வையிட்டு, ஆய்வு செய்து, பொதுமக்களிடம் பாதிப்புகளின் விவரங்கள் குறித்து முதலமைச்சர் அவர்கள் கேட்டறிந்து, சூழ்ந்துள்ள வெள்ளநீரை அகற்றும் பணியினை விரைந்து மேற்கொள்ள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், பால்வளத் துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி கருணாநிதி, சட்டமன்ற உறுப்பினர்கள், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் என்.பி. ஜெகன், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே. பிரபாகர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை செயலாளர் திருமதி பி. ஜோதி நிர்மலாசாமி, தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் ஜி.லட்சுமிபதி, தூத்துக்குடி மாநாகராட்சி ஆணையர் தினேஷ் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



சின்னாளபட்டியில் தாலிக்கு தங்கம் மற்றும் சமுதாய வளைகாப்பு விழாவில் 152பேருக்கு ரூ.1கோடியே 27லட்சத்து 24ஆயிரம் மதிப்பிலான தாலிக்கு தங்கம் மற்றும் பணம் ஆத்தூர் மற்றும் ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தைச் சேர்ந்த 200 கர்ப்பிணி பெண்களுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் ஐ.பெரியசாமி வழங்கி வாழ்த்தினார். உடன் மாவட்ட ஆட்சியர் மொ.ந.பூங்கொடி, ஒன்றிய பெருந்தலைவர்கள் ப.க.சிவகுருசாமி, மகேஸ்வரி முருகேசன், ஒன்றிய செயலாளர்கள் மணி, முருகேசன் உட்பட பலர் உள்ளனர்.

### சென்னை - வேளச்சேரி - குரு நானக் கல்லூரி வளாகத்தில்

# துப்பாக்கி சுடுதல் விளையாட்டு பயிற்சி மையம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, டிச.22 -

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குரு நானக் கல்லூரி வளாகத்தில் ஷாஹித் பகத் சிங் விளையாட்டு வளாகம் மற்றும் சர்கஹி துப்பாக்கி சுடுதல் விளையாட்டு பயிற்சி மையத்தை நேற்று முன்தினம் (20.12.2023) திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:

தென்மாவட்டங்களான தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் கடந்த மூன்று நாட்களாக அதிக அளவிலான மழை பெய்து இயற்கை பேரிடர் ஏற்பட்டுள்ளதால், நான் பாதிக்கப்பட்ட இடங்களில் மீட்பு மற்றும் நிவாரணப்பணிகளில் ஈடுபட்டிருந்தேன். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் அனுமதி பெற்று வந்துள்ளேன். அதற்கு முக்கியமான காரணம் நான் படித்தது லயோலா கல்லூரி என்றாலும் அதிகப்படியான எனது நேரத்தை இந்த கல்லூரியில் தான் செலவழித்து உள்ளேன். இந்த கல்லூரியில் உள்ள கிரிக்கெட் மைதானம் ஷெட்டில் காக் மைதானத்தில் தான் அதிகப்படியான நேரத்தை செலவழித்து உள்ளேன். அதனால் இந்த நிகழ்வுக்கு கேட்டவுடன் ஒப்புக்கொண்டேன். இக்கல்லூரியின் நிகழ்ச்சிகளுக்கு கடந்த மூன்று தலைமுறையாக நாங்கள் வந்திருக்கிறோம். குறிப்பாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அதன் பிறகு எனது தந்தையார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த ஆண்டு அடிக்கல் நாட்டு நிகழ்ச்சிக்கு வந்துள்ளார். இருபது வருடங்களுக்கு முன்பு, இதே கல்லூரிக்கு நான் சிறப்பு விருந்தினராக அதுவும் அமைச்சராக வருவேன் என்று நினைத்து கூட பார்க்கவில்லை. இக்கல்லூரி நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாடு அரசு கடந்த இரண்டரை வருடங்களில் விளையாட்டு துறைக்கு, குறிப்பாக நான் விளையாட்டுத் துறை அமைச்சராக பொறுப்பேற்றுக்கொண்ட ஒரு வருடத்தில் விளையாட்டிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றோம். முதலமைச்சர் கோப்பை போட்டியில் 4.5 இலட்சம் பேர் பங்கேற்றனர். இதற்கான பரிசுத்தொகை மட்டும் 50 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. செஸ் ஒலிம்பியாட், ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை, ஸ்குவாஷ் உலகக் கோப்பை, சைக்ளோத்தான் போன்ற போட்டிகளை நடத்தியுள்ளோம். குறிப்பாக இந்த ஆண்டு தமிழ்நாட்டில் முதல்முறையாக கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுகள் வரும் ஜனவரி 19 முதல் நடைபெற உள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்தக் கல்லூரிக்கு பெருமை சேர்க்கும் வகையில் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுகளுக்கான துப்பாக்கிச் சுடுதல் விளையாட்டு தற்போது திறந்து வைக்கப்பட உள்ள பயிற்சி மையத்தில் தான் நடைபெற உள்ளது. இது போன்று கல்லூரி மேற்கொள்ளும் அனைத்து விளையாட்டு தொடர்பான நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு அரசும் நானும் துணை நிற்போம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, தாம்பரம் காவல் ஆணையர் அமல்ராஜ், குரு நானக் கல்வி குழுமத்தின் தலைவர் ரஜிந்தர் சிங் பாசின், செயலாளர் மஞ்சித் சிங் நாயர், தாளாளர் மந்திப் சிங் மற்றும் கல்லூரி மாணவமாணவியர்கள் கலந்து கொண்டனர்.

### உலகப் பயணிகளின்

# முக்கிய சுற்றுலாத் தலமாக தமிழ்நாடு உருவாகி வருகிறது!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேச்சு!

சென்னை, டிச. 22 -

தமிழ்நாட்டிற்கு 2023 ஆம் ஆண்டில் அக்டோபர் மாதம் முடிய 10 மாதங்களில் 9,53,278 வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும், 23,83,91,071 உள்நாட்டு சுற்றுலா பயணிகளும் வருகை தந்துள்ளார்கள் என்று சுற்றுலாத் துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் தகவல் தெரிவித்துள்ளார்.

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்த சுற்றுலா அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். க. மணிவாசகன், முதன்மை செயலாளர் /சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் /மேலாண்மை இயக்குநர் திருமதி.காகர்லா உஷா ஆகியோர் முன்னிலையில் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

புதுடெல்லியில் (30.11.2023) அன்று எகனாமிக் டைம்ஸ் பத்திரிக்கையின் விருது வழங்கும் விழாவில் தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு வழங்கப்பட்ட 2023 ஆம் ஆண்டின் பாரம்பரிய மற்றும் புனித தலத்திற்கான விருது மற்றும் (8.12.2023) அன்று அவுட்லுக் டிராவலர் பத்திரிக்கை நிறுவனத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான விருது வழங்கும் விழாவில் தமிழ்நாடு சுற்றுலாத்துறைக்கு வழங்கப்பட்ட இந்தியாவில சிறந்த பாரம்பரிய சுற்றுலாத்தலத்திற்கான (தஞ்சை பெரிய கோயில்) விருது, மாநிலங்களுக்கிடையேயான சிறந்த சாலை வழி பயண பாதைக்கான (பாம்பன் பாலம்) விருது ஆகிய விருதுகளை சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் அவர்களிடம் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.க. மணிவாசன், முதன்மை செயலாளர்/சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர்/மேலாண்மை இயக்குநர் திருமதி.காகர்லா உஷா ஆகியோர் காண்பித்தார்கள்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேசுகையில் தெரிவித்ததாவது :

முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முன்னணி சுற்றுலாத் தலமாக முன்னேறி உள்ளது. கொரோனாவிற்கு பிறகு 2021 ஆம் ஆண்டில் 57,622 ஆக இருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 4,07,139 ஆக உயர்ந்து இந்த ஆண்டு 2023 ல் அக்டோபர் மாதம் முடிய 10 மாதங்களில் 9,53,278 ஆக உயர்ந்துள்ளது.

இதே போன்று உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021 ல் 11,53,36,719 ஆக இருந்து 2022 ல் 21,85,84,846 ஆக உயர்ந்து, இந்த ஆண்டு 2023 ல் அக்டோபர் மாதம் முடிய 10 மாதங்களில் 23,83,91,071 என உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டிற்கு ஆண்டு முழுவதும் அதிக சுற்றுலா பயணிகள் வருகை தரும் வகையில் முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகளை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள்.

சுற்றுலா வளர்ச்சித்திட்டப்பணிகளை பணிகள் குறித்த காலத்திற்குள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் சுற்றுலா அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும். சுற்றுலா மேம்பாட்டுத் திட்டப்பணிகள், உலக சுற்றுலா பயணிகளின் விருப்பமான முக்கிய சுற்றுலாத்தலமாக தமிழ்நாட்டை உருவாக்கு ம்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் திருமதி.இ.கமலா உள்பட சுற்றுலாத்துறை உதவி இயக்குநர்கள், மாவட்ட சுற்றுலா அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மண்டல மேலாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

### பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில்

# தூத்துக்குடிக்கு நிவாரணப் பொருட்கள்!

## டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன் அனுப்பி வைத்தார்!

சென்னை, டிச.22 -

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில், 19.12.2023 அன்று அதிகனமழையினால் பாதிக்கப்பட்ட திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டத்திற்கு 2 வாகனங்களிலும், கப்பற்படை ஹெலிகாப்டர் மூலமும் ரொட்டி, பிஸ்கெட், பால் பவுடர், குடிநீர் பாட்டில்கள் மற்றும் போர்வை உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் ஃபெடரல் வங்கி, எஸ்பேங்க், கோடாக் வங்கி ஆகியவற்றின் பங்களிப்புடன் நேற்று முன்தினம் (20.12.2023) மேலும் ஒரு வாகனத்தில் ரொட்டி, குடிநீர் பாட்டில்கள், பிஸ்கெட், ரஸ்க், நூடுல்ஸ், போர்வை, துண்டு, டூத்பிரஷ், குளியல் சோப்பு மற்றும் சானிட்டரி நாப்கின் உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் அதிகனமழையால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டத்திற்கு கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், அனுப்பி வைத்தார்.

இந்நிகழ்வின்போது, கூடுதல் ஆணையர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர். லலிதா, இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ். சமீரன், துணை ஆணையர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. சார்பில் இனமான பேராசிரியர் பெருந்தகையின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு வாணியம்பாடியில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் திருப்பத்தூர் மாவட்ட செயலாளர், க.தேவராஜி எம்.எல்.ஏ. பேராசிரியரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் தி.அ.நல்லதம்பி எம்.எல்.ஏ., அ.செ.வில்வநாதன் எம்.எல்.ஏ., மாவட்ட துணைச் செயலாளர்கள் ஆ.சம்பத்குமார், சாந்திசீனிவாசன் மாவட்டப் பொருளாளர் கே.பி.ஆர்.ஜோதிராஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு.அசோகன், கே.ஆர்.திருப்பதி, ஆலங்காயம் கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.தாமோதிரன் மற்றும் பலர் உடன் இருந்தார்கள்.

### சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள்

# இழந்த வேலைகளை மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

## மக்களவையில் கழக உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, டிச. 22 -

நாட்டில் பணத்தட்டுப்பாடு இறக்குமதி-ஏற்றுமதி நெருக்கடி மூலப்பொருட்களின் விலைவாசி உயர்வு போன்ற பல்வேறு காரணங்களால் நாட்டில் குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களில் பணிபுரியும் இலட்சக்கணக்கான மக்கள் வேலை இழந்துள்ளனர் என்பது உண்மையா? தமிழ்நாட்டில் MSMES-ன் நிலையை மேம்படுத்தவும் ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை? என்று நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அதன் கேள்விகள் வருமாறு:

பணத்தட்டுப்பாடு இறக்குமதி-ஏற்றுமதி நெருக்கடி மூலப்பொருட்களின் விலைவாசி உயர்வு போன்ற பல்வேறு காரணங்களால் நாட்டில் குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களில் பணிபுரியும் இலட்சக்கணக்கான மக்கள் வேலை இழந்துள்ளனர் என்பது உண்மையா? அதன் விவரங்கள் என்ன?

இழந்த வேலைகளை மீட்டெடுக்கவும் குறிப்பாக தமிழ்நாட்டில் MSMES-ன் நிலையை மேம்படுத்தவும் ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

தமிழ்நாட்டில் MSMEகளின் புணரமைப்பு மற்றும் மறுமலர்ச்சிக்கு அரசு ஏதேனும் நிதி உதவி அளித்துள்ளதா? அப்படியானால் அதன் விவரங்கள் யாவை?

MSME துறையின் முதலாளி மற்றும் ஊழியர்களின் நலன்களைப் பாதுகாக்க அரசு எடுத்த/ எடுக்க வேண்டியசீரிய நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அரசின்குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களு க்கான ராஜாங்க அமைச்சர் பானு பிரதாப் சிங் வர்மா எழுத்துபூர்வமாக அளித்த பதில் வருமாறு:

தமிழ்நாடு உட்பட நாட்டில் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் துறையினர் எதிர்கொள்ளும் பிரச்னைகளை தீர்க்க அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அவை பின்வருமாறு:

1) 2023-24 பட்ஜெட்டில் குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான (CGTMSE)ரூ. 9,000 கோடி கடன் உத்தரவாத அறக்கட்டளையின் உட்செலுத்தலை அறிவித்தது. 2.00 லட்சம் கோடி கடன் செலவு குறை க்கப்பட்டது.



2) பிரதம மந்திரி விஸ்வகர்மா திட்டம்: ஒரு ஒன்றிய துறை திட்டம் பட்ஜெட் செலவில் ரூ. 2023-24 முதல் 2027-28 வரையிலான காலகட்டத்தில் செயல்படுத்த 13 000 கோடி. 18 வர்த்தகங்களில் தங்கள் கைகளால் கருவிகளைப் பயன்படுத்தி வேலை செய்யும் கைவினைஞர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு முழுமையான ஆதரவை வழங்குவதற்கு இந்தத் திட்டம் திட்டமிடுகிறது.

3) Vivad se Vishwas - MSMEகளுக்கான நிவாரணம்: கோவிட் காலத்தில் MSMEகள் ஒப்பந்தங்களைச் செயல்படுத்தத் தவறினால் ஏலம் அல்லது செயல் திறன் பாதுகாப்பு தொடர்பான பறிமுதல் செய்யப்பட்ட தொகையில் 95 சதவீதம் அரசு மற்றும் அரசு நிறுவனங்களால் அவர்களுக்குத் திருப்பித் தரப்படும்.

4) வருமான வரிச் சட்டத்தின் 43பி பிரிவின் கீழ்: MSMEகளுக்கு உண்மையில் பணம் செலுத்தப்படும் போது மட்டுமே பணம் செலுத்துவதில் ஏற்படும் செலவினங்களுக்கு விலக்கு அனுமதிக்கப்படுகிறது.

5) ரூ. 200 கோடி வரை கொள்முதல் செய்வதற்கான உலகளாவிய டெண்டர்கள் இல்லை.

6) சில்லறை மற்றும் மொத்த விற்பனை வர்த்தகர்களை MSMEக்களாக சேர்ப்பது w.e.f. 02.07.2021.

7) MSMEகளின் நிலையில் மேல்நோக்கி மாற்றம் ஏற்பட்டால் வரி அல்லாத பலன்கள் 3ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படும் w.e.f. 18.10.2022.

8) முதலாளிகள் மற்றும் ஊழியர்களுக்கு ஆதரவை வழங்க இந்திய அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அவற்றில் சில பின்வருமாறு:

(i) (அ) MSMEதுறை வரம்பை விரிவுபடுத்துவதற்காக 26.06.2020 அன்று MSMEகளின் இரட்டை அளவுகோல் அடிப்படையிலான வரையறையை ஏற்றுக்கொள்வது என MSMEஅமைச்சகம் முடிவு செய்துள்ளது.

(ஆ) 01.07.2020 அன்று MSMEக்கான பதிவுகளை எளிதாக்குவதற்கு Udyamபோர்டல் தொடங்கப்பட்டது. அதன்பிறகு 04.12.2023 வரை 14.25 கோடிக்கும் அதிகமான வேலை வாய்ப்பைக் கொண்ட 2.12 கோடி MSMEகள் Udyam Portalஇல் பதிவு செய்துள்ளனர்.

(c) முன்னுரிமைத் துறைக் கடனின் கீழ் பலன்களைப் பெறுவதற்கான முறைசாரா குறு நிறுவனங்களை (IMEs)முறையான வரம்பிற்குள் கொண்டு வர 11.01.2023 அன்று Udyam Assistபிளாட்ஃபார்ம் தொடங்கப்பட்டது. அதன்பிறகு 04.12.2023 வரை 1.22 கோடிக்கும் அதிகமான வேலை வாய்ப்பைக் கொண்ட 1.04 கோடி IMEகள் UAPஇல் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(ii)கோவிட் காலத்தில் MSMEதுறையின் முதலாளி மற்றும் ஊழியர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக19 நெருக்கடியில் இந்திய அரசாங்கம் அவசரகால கடன் வரி உத்தரவாதத் திட்டத்தை மே 2020 இல் அறிமுகப்படுத்தியது இது மார்ச் 31 2023 வரை இயங்கும். இந்தத் திட்டத்தின் கீழ் 1.13 கோடி கடன்கள் ரூ.2.43 லட்சம் கோடி MSMEகடன் வாங்குபவர்களுக்கு நீட்டிக்கப்பட்டது. இது இந்த MSMEகளின் ஊழியர்கள் மற்றும் முதலாளிகள் நலத்துக்கு உதவியது.

(iii)ஆத்மநிர்பர் பாரத் ரோஜ்கர் யோஜனா கோவிட்-19 தொற்றுநோய்களின் போது புதிய வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும் வேலை இழப்பை மீட்டெடுப்பதற்கும் முதலாளிகளை ஊக்குவிக்கும் வகையில் 2020 அக்டோபர் 1 ஆம் தேதி தொடங்கப்பட்டது. பதிவு செய்வதற்கான இறுதித் தேதி 31.03.2022.

(iv)கோவிட்-19 தொற்று நோய்களின் போது மோசமாகப் பாதிக்கப்பட்ட தெருவோர வியாபாரிகளுக்கு தங்கள் வணிகங்களை மீண்டும் தொடங்குவதற்கு பிணையில்லாத செயல்பாட்டு மூலதனக் கடனை எளிதாக்குவதற்காக ஜூன் 01 2020 முதல் ஒன்றிய அரசு பிரதம மந்திரி தெரு வியாபாரிகளின் ஆத்மா நிர்பர்நிதி (PM SVANIdhiதிட்டத்தை) செயல்படுத்தி வருகிறது.

(v) பிரதான் மந்திரி முத்ரா யோஜனா (PMMY)சுயதொழில் வசதிக்காக ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டது. PMMYஇன் கீழ் பிணைய இலவச கடன்கள் ரூ. 10 லட்சம் குறு/சிறு வணிக நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் தங்கள் வணிக நடவடிக்கைகளை அமைக்க அல்லது விரிவுபடுத்துவதற்கு அவர்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

(vi) PMGatiSaktiஎன்பது பொருளாதார வளர்ச்சி மற்றும் நிலையான வளர்ச்சிக்கான மாற்றும் அணுகுமுறையாகும். இந்த அணுகுமுறை சாலைகள் ரயில்வே விமான நிலையங்கள் துறைமுகங்கள் வெகுஜன போக்குவரத்து நீர்வழிகள் மற்றும் தளவாட உள்கட்டமைப்பு ஆகிய ஏழு இயந்திரங்களால் இயக்கப்படுகிறது. இந்த அணுகுமுறை மூலம் இயக்கப்படுகிறது

க்ளீன் எனர்ஜி மற்றும் சப்கா பிரயாஸ் அனைவருக்கும் மிகப் பெரிய வேலை மற்றும் தொழில் முனைவோர் வாய்ப்புகளுக்கு வழிவகுக்கும். 2022 பட்ஜெட் அறிவிப்பின்படி Udyamபோர்ட்டல் மற்ற இணையதளங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது-

ஷ்ரம் தேசிய தொழில் சேவை (என்சிஎஸ்) போர்டல் மற்றும் அமைச்சகத்தின் ஸ்கில் இந்தியா டிஜிட்டல் (எஸ்ஐடி) போர்டல் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு

திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் தெரிவித்துள்ளார்.


கலைஞர்
100
1924 - 2023
தி.மு.க சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில்
அன்பின் இனிய
கிறிஸ்துமஸ் பெருவிழா - 2023
நாள்: 22-12-2023, வெள்ளிக்கிழமை
நேரம்: மாலை 4.00 மணி
இடம்: தொன்போஸ்கோ பள்ளி வளாகம்,
பெரம்பூர். (பிருந்தா திரையரங்கம் அருகில்)
விழாத் தலைமை
சிறுபான்மையின மக்களின் ஒரே பாதுகாவலர்
மாண்புமிகு
மக்களின் முதல்வரே...
வருக.. வருக... வருக...
நன்றியுரை
பி.கே.சேகர்பாபு
மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்,
சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர்.
அழைப்பின் மகிழ்வில்
டாக்டர் அ.சுபேர் கான் எம்.எஸ் (ஆர்த்தோ)
மாநிலச் செயலாளர் - கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு.
தி.மு.க.சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.12.2023) அதி கனமழையால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்ட தூத்துக்குடிக்கு நேரில் சென்று, குறிஞ்சி நகர் போல் பேட்டை பகுதியில் வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் என்.பி. ஜெகன், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே. பிரபாகர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் ஜி. லட்சுமிபதி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.12.2023) அதி கனமழையால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்ட தூத்துக்குடிக்கு நேரில் சென்று, எட்டையபுரம் 3–வது கேட் மேம்பாலத்திலிருந்து வெள்ளம் சூழ்ந்த பகுதிகளை பார்வையிட்டு, வெள்ள நீரை அகற்றிட துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி.கீதா ஜீவன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி கருணாநிதி, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் என்.பி. ஜெகன், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் ஜி.லட்சுமிபதி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.12.2023) அதி கனமழையால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்ட தூத்துக்குடிக்கு நேரில் சென்று, செயின்ட் மேரிஸ் பள்ளியில் உள்ள நிவாரண மையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களிடம் அவர்களுக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள் குறித்து கேட்டறிந்து, முகாம்களில் தங்கியுள்ள சுமார் 600 நபர்களுக்கு அரிசி, வேஷ்டி, சேலை, போர்வை, பாய், பிஸ்கெட் மற்றும் ரொட்டி, பால் பவுடர், தண்ணீர் பாட்டில் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், பால்வளத் துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி, கருணாநிதி, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் என்.பி.ஜெகன், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே. பிரபாகர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திருமதி பி. ஜோதி நிர்மலாசாமி, தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் ஜி.லட்சுமிபதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## தமிழ்நாடு சுற்றுலா பயணத் திட்டங்களுக்கு

# பொதுமக்களிடையே ஆர்வம் அதிகரித்து வருகிறது!

### ‘ஓட்டல் தமிழ்நாடு’ மேலாளர்களுக்கு பரிசுகள் வழங்கி - அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேச்சு!

சென்னை, டிச. 22 - தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 14 நாட்கள் தென்னிந்திய சுற்றுலா, 8 நாட்கள் கோவா - மந்த்ராலயம், 7 நாட்கள் மூகாம்பிகா சுற்றுலா உள்ளிட்ட சுற்றுலா பயணத் திட்டங்களின் கீழ் சுற்றுலா செல்ல பொதுமக்கள் ஆர்வம் அதிகரித்து வருகின்றது என்று சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், படகு குழாம்கள், சுற்றுலா பயணத்திட்டங்கள் குறித்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாளர்கள் மற்றும் மண்டல மேலாளர்களுக்கான ஆய்வுக் கூட்டம் அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், ஆணையர் காகர்லா உஷா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில், சிறப்பாக செயல்பட்ட ஓட்டல் மேலாளர்களுக்கு பரிசுத்தொகை காசோலைகளை அமைச்சர் கா.ராமச்சந்திரன் வழங்கினார்.

இக்கூட்டத்தில் அமைச்சர் பேசுகையில் தெரிவித்ததாவது,

தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கை அளித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை 1971 ஆம் ஆண்டில் உருவாக்கினார்கள். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவு விடுதிகள், சுற்றுலா பயணத்திட்டங்கள், சுற்றுலா பேருந்து சேவைகள், படகு சேவைகள், தொலை நோக்கி இல்லங்கள் என குறைந்த செலவில் சுற்றுலா பயணிகளுக்கு பல்வேறு சுற்றுலா சேவைகளை வழங்கி வருகின்றது. முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை இந்தியாவிலேயே சுற்றுலா பயணிகளின் விருப்பமான முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 29.11.2023 அன்று தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 2.92 கோடி ரூபாய் மதிப்பிலான 2 புதிய வால்வோ சொகுசு சுற்றுலா பேருந்துகளின் பயன்பாட்டினை தொடங்கி வைக்கும் விதமாக, சென்னை, செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் அரசு சிறப்பு பள்ளிகளில் பயிலும் 60 மாற்றுத்திறனாளி மாணவ, மாணவிகள் மாமல்லபுரத்திற்கு சுற்றுலா பயணம் மேற்கொள்ள அச்சுற்றுலா பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்து, மாணவ, மாணவிகளை வழியனுப்பி வைத்தார்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 50 க்கும் மேற்பட்ட சுற்றுலா பயணத்திட்டங்களுக்காக சுற்றுலா பேருந்து சேவைகள் வழங்கி வருகின்ற போதிலும் திருப்பதி சுற்றுலா, அறுபடை வீடு, பிறமாநிலத்தவர்கள் விரும்பிச் செல்லும் 8 நாட்கள் தமிழ்நாடு சுற்றுலா உள்ளிட்ட சில சுற்றுலாக்கள் மக்கள் அதிகம் சென்று வந்த நிலையில் தற்போது இந்த மாதம் (டிசம்பர்) 14 நாட்கள் பயணம் மேற்கொள்ளும் தென்னிந்திய சுற்றுலா, 8 நாட்கள் பயணம் மேற்கொள்ளும் கோவா - மந்த்ராலயம், 7 நாட்கள் பயணம் மேற்கொள்ளும் மூகாம்பிகா சுற்றுலா பயணத்திட்டங்களின் கீழ் சுற்றுலா பயணிகள் சுற்றுலா செல்ல பதிவு செய்து சுற்றுலா பயணம் சென்று வருகின்றார்கள்.

இந்த சுற்றுலா பயணத் திட்டங்களின் கீழ் கடந்த 4, 5 ஆண்டுகளாக சுற்றுலா இயக்கப்படாத நிலையில் சுற்றுலா பயணிகள் மீண்டும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் இந்த சுற்றுலா பயணத்திட்டங்களின் கீழ் சுற்றுலா மேற்கொண்டுள்ளது தமிழ்நாட்டு சுற்றுலா பயணிகள் சுற்றுலா மேற்கொள்ள அதிகம் ஆர்வம் கொண்டு வருவதை காட்டுகின்றது. சுற்றுலா பயணிகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் www.ttdconline.com என்ற இணையதளத்தின் மூலமாக தாங்கள் இருக்கும் இடத்திலேயே முன்பதிவு செய்து சுற்றுலா பயணங்களை மேற்கொள்ளலாம்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் அலுவலர்களும், பணியாளர்களும் சுற்றுலா பயணிகளுக்கு சிறந்த சேவையை வழங்கி அவர்களுடைய முதலாவது விருப்பமான தேர்வாக சுற்றுலா பயணங்கள், ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள் மற்றும் அமுதகம் உணவகங்களை உருவாக்கும் வகையில் பணியாற்றிட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கா.ராமசந்திரன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொதுமேலாளர் இ.கமலா உள்பட சுற்றுலாத்துறை அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மண்டல மேலாளர்கள், மேலாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.




முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில், இனமான பேராசிரியர் அவர்களின் பிறந்த நாளில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி “கனவு ஆசிரியர்” திட்டத்தின் கீழ் தேர்வுப் பெற்ற ஆசிரியர்களுக்குக் கனவு ஆசிரியர் விருதும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கி கௌரவித்தார். இந்நிகழ்வில் அமைச்சர் மதிவேந்தன், நாமக்கல் நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் சின்ராஜ், சட்டமன்ற உறுப்பினர் இராமலிங்கம், பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் குமரகுருபரன், மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் முனைவர் அறிவொளி, தொடக்கக் கல்வி இயக்கக இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன் ஆகியோரும் ஆசிரியப் பெருமக்களும் கலந்து கொண்டார்கள்.

## நெல்லை – தூத்துக்குடி மாவட்டங்களில்

# அரிசி - பால் - பிஸ்கெட் உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள்!

### அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார்!

தூத்துக்குடி, டிச.22- குமரிக்கடலில் நிலவிய வளிமண்டல கீழடுக்கு சுழற்சியின் காரணமாக, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய தென் மாவட்டங்களில் 16.12.2023 அன்று முதல், புயல் இல்லாமலேயே அதீத மழை பெய்தது. இதனால் 4 மாவட்டங்களும் மழைநீரால் சூழப்பட்டு கடுமையாகப் பாதிக்கப்பட்டன. மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது.

இந்நிலையில், முதலமைச்சர் அறிவுறுத்தலின் படி, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நேற்று முன்தினம் (20.12.2023) பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து நிவாரண உதவிகள் வழங்கினார்.

திருநெல்வேலி, நிவாரண முகாம் முத்து மஹாலில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ள ஆலயங்குடி, அனுராதநல்லூர், முத்தாலம்குறிச்சி, பெந்தம்பள்ளி, சமத்துவபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 500 குடும்பங்களுக்கு, பால், பிஸ்கெட், அரிசி, பருப்பு, பாய், போர்வை மற்றும் தண்ணீர் பாட்டில் போன்ற நிவாரணப் பொருட்களை, துறை சார்ந்த அதிகாரிகளுடன், பொதுப்பணித்துறை அமைச்சர் வழங்கினார்.

பொதுப்பணித்துறை அமைச்சர், ஸ்ரீவைகுண்டம் பகுதிக்குச் சென்று கொண்டிருந்தபோது, ஆதிச்சநல்லூர் பகுதியில் வசித்த மக்களைச் சந்தித்து, பால்பாக்கெட்களை வழங்கினார்கள். இப்பகுதியில் உள்ள மக்களுக்கும், உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்க அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

மேலும், கருங்குளம் அருகே பொதுமக்கள், அமைச்சர் வாகனத்தை வழிமறித்து, மூன்று நாளாக காணாமல் போன சர்க்கரை பீர்முகமது என்பவரை கண்டுப்பிடித்துதர கோரிக்கை வைத்தனர். அவர்களின் கோரிக்கையினை ஏற்று, தேசிய பேரிடர் மீட்பு இராணுவ வீரர்களை வரவழைத்து, காணாமல் போன சர்க்கரை பீர்முகமது என்பவரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அதனைத் தொடர்ந்து, அமைச்சர் , தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம் பகுதியில் உள்ள கண்ணபிரான் தெருவிற்குச் சென்று, பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து பால் மற்றும் பிஸ்கெட்களை வழங்கினார்.

#### மருத்துவமனையில் ஆய்வு

மேலும், ஸ்ரீவைகுண்டம் அரசு மகப்பேறு மருத்துவமனைக்குச் சென்று ஆய்வு செய்த அமைச்சர் , மருத்துவமனை வளாகத்தில் தேங்கியிருந்த மழைநீரை அகற்றும் பணியை விரைவுப்படுத்தி, மருத்துவமனைக்கு, நோயாளிகள் வருகை தரும் வகையில் மழைநீர் அகற்றப்பட்டது. மழை வெள்ளநீரால் மருந்துகள் அடித்துச் செல்லப்பட்டிருந்தை கண்டு, மருந்துகளை வரவழைக்க உத்தரவிட்டார்.

மழைநீரால் சூழப்பட்ட ஸ்ரீவைகுண்டம் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வளாகத்திற்குச் சென்று, ஆய்வு செய்த அமைச்சர், மோட்டார் மூலம் மழைநீரை அகற்ற அதிகாரிகளை அறிவுறுத்தினார்கள்.

மழைநீர் சூழ்ந்துள்ள ஸ்ரீவைகுண்டம், நவலட்சுமிபுரத்திற்கு நிவாரண உதவிகள் வழங்கச் சென்ற அமைச்சர் அவர்களிடம், அப்பகுதி பொது மக்கள், மழைநீரில் சிக்கி மூன்று சடலங்கள் இருப்பதாக தெரிவித்தார்கள். அமைச்சர் உடனடியாக ஜே.சி.பி. இயந்திரம் வரவழைக்கப்பட்டு, மூன்று சடலங்களை மீட்டு, ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

#### ஸ்ரீவைகுண்டத்தில் நிவாரண உதவிகள்!

ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார்திருநகரி பகுதியில் உள்ள இந்து அரசு மேல்நிலைப்பள்ளி நிவாரண முகாமில், பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ள, பொது மக்களுக்கு நிவாரண உதவிகள் மற்றும் உணவு தயாரிக்கப்பட்டு, அமைச்சர் வழங்கினார். இந்தப் பள்ளியில் அமைச்சர் , அப்பகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் மற்றும் பாதுகாப்பு குறித்து ஆலோசனை நடத்தினார்.

ஆழ்வார்திருநகரி ஆற்றை ஒட்டியுள்ள பகுதிக்குச் சென்று, பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு பால் பாக்கெட்டுகளை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, கமலாபாத் என்ற இடத்தில் உள்ள மசூதி நிவாரண முகாமிற்குச் சென்று, பாதிக்கப்பட்ட மக்களுக்கு, பால், போர்வை, பாய் போன்ற நிவாரண உதவிகள் வழங்கினார்கள். அப்பகுதி பொது மக்கள் மழைவெள்ளத்தால் பாதிக்கப்படாதவாறு, நிரந்தர தீர்வு காண அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை விடுத்தார்கள். அமைச்சர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

கீழ்ஸ்ரீவைகுண்டம் பகுதியில், கிறிஸ்தவ ஆலய நிவாரண முகாமிலும், இந்து கோவில் முகாமிலும் தங்க வைக்கப்பட்டுள்ள பொது மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கினார்கள். நாளை அவர்களுக்கு தேவையான உணவு வழங்க ஏற்பாடுகள் செய்ய அலுவலர்களை அறிவுறுத்தினார்.

#### ஆலோசனைக் கூட்டம்!

மேலும், அமைச்சர், ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள பாதிக்கப்பட்ட 18 பகுதிகளுக்கு, நேற்று (21.12.2023) உணவு, நிவாரண பொருட்கள் மற்றும் முகாம்களில் தங்க வைப்பட்டுள்ள பொது மக்களின் பாதுகாப்பு குறித்து, அதிகாரிகள், அப்பகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆகியோருடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.

இந்நிகழ்ச்சியின்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு தலைமைப் பொறியாளர் இரா.சந்திரசேகர், பொதுப்பணித்துறை சிறப்பு அலுவலர் இரா. விஸ்வநாத், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன் மற்றும் நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## அமலாக்கத்துறை

# எனக்கு அனுப்பிய சம்மன் சட்ட விரோதமானது!

### கெஜ்ரிவால் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, டிச. 22- டெல்லி மதுபான கொள்கை மாற்றம் தொடர்பான வழக்கில் அமலாக்கத்துறையால் தனக்கு அனுப்பப்பட்ட சம்மன் சட்டவிரோதமானது என்று ஆம் ஆத்மி கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளரும், மாநில முதலமைச்சருமான அரவிந்த் கெஜ்ரிவால் குற்றம் சாட்டியுள்ளார்.

டெல்லி மதுபான கொள்கை மாற்றம் தொடர்பான வழக்கு விசாரணையில் நேரில் ஆஜராகும்படி நவம்பர் மாதம் அமலாக்கத்துறை முதலில் சம்மன் அனுப்பியது. ஆனால் அந்த சம்மனை கெஜ்ரிவால் ஏற்காததுடன் விசாரணையில் ஆஜராகவில்லை. இந்நிலையில் நேற்று விசாரணையில் ஆஜராகும்படி, அமலாக்கத்துறை மீண்டும் சம்மன் அனுப்பியிருந்தது.

#### உள்நோக்கம் கொண்ட சம்மன்!

இதையடுத்து அந்த சம்மனுக்கு தனது பதிலை அமலாக்கத்துறைக்கு கெஜ்ரிவால் அனுப்பியுள்ளார். அதில் அவர், சட்ட ரீதியில் அனுப்பப்படும் சம்மனை ஏற்க தாம் தயாராக உள்ளதாகவும், ஆனால் முந்தைய சட்டவிரோத சம்மனை போலவே தற்போதும் சட்டவிரோத சம்மனை அமலாக்கத்துறை அனுப்பியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

அமலாக்கத்துறையின் சம்மன் அரசியல் உள்நோக்கம் கொண்டது, அந்த சம்மன் திரும்ப பெறப்பட வேண்டுமென்று கூறியுள்ள கெஜ்ரிவால், தாம் நேர்மையாகவும், வெளிப்படையாகவும் வாழ்ந்து வருவதாகவும், தன்னிடம் மறைப்பதற்கு எதுவும் இல்லை என்றும் கெஜ்ரிவால் குறிப்பிட்டுள்ளார்.



கனமழையால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் தொகுதி சோரிஸ்புரம் கிராமத்தில் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் – குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் ரூபாய் 10 லட்சம் மதிப்பீட்டில் வெள்ள நிவாரணப் பொருட்களை வழங்கினார். உடன் தூத்துக்குடி மத்திய ஒன்றிய கழக செயலாளர் ஜெயக்கோடி, மாவட்ட பிரதிநிதி நாகராஜ், எஸ்.ஜனார்த்தனன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



அருப்புக்கோட்டை தொகுதிக்குட்பட்ட கட்டங்குடி ஊராட்சி தாதம்பட்டியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிய பேருந்து நிறுத்த கட்டிடம் கட்டுவதற்காக பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் அடிக்கல் நாட்டினார்.

### முனைவர் க.பொன்முடி வழக்கு!

# உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து வெற்றி பெறுவோம்!

## சென்னை - அண்ணா அறிவாலயத்தில் - கழக சட்டத்துறைச் செயலாளர் - மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ பேட்டி!

சென்னை, டிச. 22 -

சென்னை, அண்ணா அறிவாலயம், கழக அலுவலகத்தில், நேற்று செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த கழக சட்டத் துறைச் செயலாளர் - மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ, "முன்னாள் அமைச்சர் முனைவர் க. பொன்முடி தொடர்பான வழக்கில், உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து வெற்றி பெறுவோம்!" என்று குறிப்பிட்டார்.



தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் - மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் போது குறிப்பிட்டதாவது!

2006 - 2011 ஆம் ஆண்டு காலத்தில் பொன்முடி அமைச்சராக இருந்த போது வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக அ.தி.மு.க. ஆட்சியில் பழிவாங்கும் எண்ணத்தோடு தொடரப்பட்ட வழக்கில் கீழ் நீதிமன்றத்தில் விடுதலை கிடைத்தது. அதை எதிர்த்து மேல்முறையீடு செய்த வழக்கில், விசாரணை நிறைவு பெற்று கீழமை நீதிமன்றம் கொடுத்த உத்தரவை ரத்து செய்து குற்றவாளி என்று தீர்ப்பளித்து, தண்டனை காலமும் அறிவிக்கப் பட்டுள்ளது.

இத்தனை வருட பழைய வழக்கு என்பதாலும், வயோதிக காரணத்தாலும், கீழமை நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது. அதை உயர்நீதிமன்றம் மாற்றி எழுதியுள்ளது போன்ற காரணங்களால் 3 வருட சாதாரண சிறை தண்டனையும், தலா 50 லட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வதற்கு 30 நாட்கள் சிறை தண்டனையை நிறுத்தி வைத்தும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு!**

இந்த வழக்கில் உடனடியாக உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்படும். அதில் அவர் விடுதலை செய்யப்படுவார். அவரது துணைவியார் அவர்கள் பல்வேறு தொழில்களை வெற்றிகரமாக நடத்தி வருடத்திற்கு 5 கோடி ரூபாய் அளவிற்கு வருமானம் வருவதாக கணக்குகள் காட்டப்பட்டுள்ளது.

பொன்முடியின் துணைவியார் அவர்கள் குறித்த நேரத்தில் வருமான வரி கணக்குகளை தாக்கல் செய்யவில்லை என்பது சந்தேகத்தை ஏற்படுத்துவதாக கூறி தான் கீழமை நீதிமன்றம் கொடுத்த விடுதலையை ரத்து செய்துள்ளனர்.

1996 - 2001 காலகட்டத்திலும் பொன்முடி அவர்கள் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக ஒரு வழக்கு தொடுக்கப்பட்டது. அந்த வழக்கின் ஆதாரங்களை பார்த்தால், பொன்முடிக்கு குடும்ப சொத்தாக 100 ஏக்கர் சித்தூரில் இருந்ததும், தொழிலை ஆரம்பிக்கும் போது பொன்முடியின் சகோதரர்கள் பெரும் அளவிற்கு முதலீடுகளை கொடுத்ததும் ஆதார பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

**விடுதலை பெற்றுத் தரப்படும்!**

இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட வங்கி அதிகாரிகள், சாட்சியங்கள் அடிப்படையில் மிக லாபகரமாக பொன்முடியின் மனைவி தொழிலை நடத்தி வந்தார் என்பதும், வருடத்திற்கு ரூ.5 கோடி அளவிற்கான வியாபாரம் செய்து வந்துள்ளார் என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால் குறித்த நேரத்தில் வருமான வரி செலுத்தவில்லை என்ற காரணம் தான் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக கூறி விடுதலையை ரத்து செய்து தண்டனையை உயர்நீதிமன்றம் வழங்கியுள்ளது. தி.மு.க. சட்டத்துறை சார்பில் மேல் முறையீடு செய்து விடுதலை பெற்றுத்தரப்படும்.

**நீதிபதி : அ.தி.மு.க. ஆட்சியில் சட்டத்துறைச் செயலாளர்!**

நீதிபதி என்பவர் எந்த சந்தேகத்திற்கும் அப்பாற்பட்டவர். ஆனால் சட்டத்தின் அடிப்படையில், அ.தி.மு.க. ஆட்சியின் போது அவர் சட்டத்துறை செயலாளராக பணியாற்றினார். அப்போது இந்த வழக்கில் இந்த சொத்துகளை முடக்கம் செய்வதற்கான கோப்புகளை அவர் கையாண்டுள்ளார். இந்த வழக்கு நடக்கும் போது அது தெரியவில்லை, நேற்றைக்குதான் பொன்முடி அவர்களுக்கு தெரிய வந்தது. அதை நீதிபதி அவர்களிடம் எடுத்து சொன்னோம். அப்போது நீதிபதி சொல்லும் போது, முன்னரே இதை தெரியப்படுத்தியிருந்தால்கூட இந்த வழக்கில் இருந்து விலகியிருக்க மாட்டேன் என கூறினார். இது முழுக்க முழுக்க சட்டம் சார்ந்த ஒரு பிரச்சினை. அந்த பிரச்சி னையை நாங்கள் நிச்சயம் உச்சநீதிமன்றத்திலும் எடுத்து வைப்போம்.

இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியை குறுக்கு விசாரணை செய்யும் போது, பொன்முடி அவர்களின் வருமானத்திற்கும், அவரது மனைவியின் வருமானத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், இந்த சொத்துகள் க.பொன்முடி வருமானத்தின் அடிப்படையில் வாங்கியதற்கான எந்த ஆதாரமும் இல்லை என்றும் கீழமை நீதிம ன்றத்தில் ஒப்புக் கொண்டுள்ளார். அதன் அடிப்படையில்தான் கீழமை நீதி மன்றம் இந்த வழக்கில் விடுதலை செய்தது. தற்போது கூட, குறித்த நேரத்தில் வருமான வரி தாக்கல் செய்ய வில்லை. அது சந்தேகத்தை எழுப்புகிறது என்றுதான் உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

**உச்சநீதிமன்றத்தில் உரிய நிதியை பெறுவோம்!**

ஆவணங்களின் அடிப்படையில் பொன்முடி அவர்களின் மனைவிக்கு வருடத்திற்கு 5 கோடி ரூபாய் அளவிற்கு வருமானத்தை ஈட்டும் தொழில் இருக்கிறது என்பதை நிரூபித்துள்ளோம். குறித்த நேரத்தில் வருமான வரி தாக்கல் செய்யவில்லை என கூறியிருக்கும் நிலையில், உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து உரிய நீதியை பெறுவோம்.

கொடுக்கப்பட்டிருக்கும் 30 நாட்களில் மேல்முறையீடு செய்து உச்சநீதிமன்றத்தில் ஜாமீன் பெறுவோம். மேலும், இந்தத் தண்டனையை நிறுத்தி வைக்க முயற்சி செய்வோம். அப்படி உச்சநீதிமன்றம் சார்பில் தண்டனை நிறுத்தி வைக்கப் பட்டால் தகுதி இழப்பு என்பது இல்லாமல் ஆகிவிடும்.

தி.மு.க. மிக பலமாக இருக்கிறது, அதை கண்டு பா.ஜ.க. பயப்படுகிறது என்பதுதான் எதார்த்தம். 2024க்கு பிறகு பா.ஜ.க.வை சேர்ந்தவர்களின் பட்டியல்களும் வெளிவரும்.

இவ்வாறு மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ பேட்டியளித்தார்.

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்:

# மாநில அதிகாரிகளுக்கு ஐ.ஏ.எஸ். பதவி உயர்வு!

## ஒன்றிய அமைச்சருக்கு கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

சென்னை, டிச. 22 -

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் மாநில அதிகாரிகளுக்கு ஐ.ஏ.எஸ். பதவி உயர்வு வழங்குவது குறித்து ஒன்றிய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் ஜிக்கு டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அதிகாரிகளுக்கு ஆண்டுதோறும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாகப் பதவி உயர்வு அளிப்பது தொடர்பான முக்கியமான கவலையை எடுத்துரைத்தார். 15.12.2023 தேதியிடப்பட்ட கடிதம், திட்டமிடப்பட்ட பதவி உயர்வு செயல்பாட்டில் தாமதம் காரணமாக இந்த அதிகாரிகள் எதிர்கொள்ளும் உடனடி பிரச்சினையை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

தமிழ்நாடு மாநில அரசு ஒவ்வொரு ஆண்டும் மாநில அரசுப் பணி அதிகாரிகளின் பதவி உயர்வுக்கு தேவையான பரிந்துரைகளை யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு (UPSC) அனுப்புகிறது. இருப்பினும், இந்த ஆண்டு, 2022 ஆம் ஆண்டிற்கான முன்மொழிவு UPSCயிடம் நிலுவையில் இருப்பதாகக் கூறப்படுகிறது, இது அதிகாரிகளின் பதவி உயர்வு ஆபத்தில் இருக்கக்கூடும் என்ற அச்சத்தை எழுப்புகிறது.

நிறுவப்பட்ட செயல்முறையின்படி, UPSC முன்மொழிவுகளை ஆய்வு செய்து, தகுதி சரிபார்த்த பின், தேர்வுக் குழுவின் கூட்டத்தைக் கூட்டுகிறது. UPSC இன் தலைவர் அல்லது உறுப்பினர் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டங்கள், IAS பதவி உயர்வுக்கு தகுதியான அதிகாரிகளின் பட்டியலை இறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இதையடுத்து, பணியாளர், பொது மக்கள் குறைதீர்ப்பு மற்றும் ஓய்வூதியத் துறை, ஆண்டு இறுதிக்குள் பதவி உயர்வு ஆணைகளை வழங்குகிறது.

2023 ஆம் ஆண்டு முடிவடைகிறது, மேலும் குழுவின் செல்லுபடியாகும் காலம் 31.12.2023 வரை மட்டுமே உள்ளது என்பதன் மூலம் இந்த விஷயத்தின் அவசரம் வலியுறுத்தப்படுகிறது.

இவ்வாறு அவர் தமது கடிதத்தில் கூறியுள்ளார்.




தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிபட்டி தனியார் திருமண மண்டபத்தில் மக்களுடன் முதல்வர் முகாமை ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் துவக்கி வைத்தார். உடன் பேரூராட்சி மன்ற தலைவர் பொன். சந்திராகலா, துணை சேர்மன் ஜோதிசேகர், கவுன்சிலர் ராமசாமி, பேரூர் செயலாளர் சரவணன் மற்றும் அரசு அதிகாரிகள், பொதுமக்கள், கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# களத்தில் நிற்கும் தி.மு.க.வும்... காணாமல் போன பா.ஜ.க.வும்..

**செ**ன்னையைப் புரட்டிப் போட்ட வரலாறு காணாத மழைவெள்ளத்தின் நிவாரணப் பணிகள் முடிவடைவதற்கு முன்பாகவே...தென் மாவட்டங்களை புரட்டிப் போட்டது கனமழை.

100 செ.மீட்டரைத் தாண்டிய கன மழையால் தென்மாவட்டங்கள் என்ன ஆகுமோ என்று எல்லோரும் அச்சப்பட்ட நிலையில், தமிழ்நாடு அரசின் துரிதமான நடவடிக்கைகளால் மிக வேகமாக அங்கே இயல்பு நிலை திரும்பி வருவதைப் பார்க்கிறோம்.

இந்த நிலையில், முதலமைச்சர் அவர்கள் டெல்லி சென்றதைக் குறித்து ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன் உள்ளிட்ட பா.ஜ.க.வினர் விமர்சனங்களை வைத்து வருகின்றனர்.

ஒரு பத்திரிக்கையாளனாக, அரசியல் நிகழ்வுகளை உன்னிப்பாகக் கவனித்து வருபவனாக நாட்டு மக்களுக்கு சில உண்மைகளைச் சொல்ல வேண்டிய கடமை எனக்கு உள்ளது..

கொரோனா பேரிடரைக் கண்டு உலக நாடுகளெல்லாம் அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்த வேளையில், மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்கிறார்.

சொந்த உறவுகளே கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்திக்க அஞ்சி ஒதுக்கிச் சென்ற நிலையில். கொரோனா வார்டுக்குள்சென்று அங்கு சிகிச்சை பெற்று வருபவர்களைச் சந்தித்து, "நான் உங்களுடன் இருக்கிறேன்" என்று அவர்களுக்கு ஆறுதலையும், நம்பிக்கையையும் தந்தவர் இந்த முதல்வர்.

அன்று அவர் அவ்வாறு செல்வதற்குத் துணிந்தபோது மருத்துவர்களே கூட உடனடியாக அதை ஏற்கவில்லை. ஆயினும் நாட்டு மக்களின் நலன் பெரிது என்று அவர் சென்ற போது அது உளவியல் ரீதியில் அந்த நோயாளிகளுக்கு மிகப்பெரிய தன்னம்பிக்கையைக் கொடுத்து அவர்கள் விரைந்து நலம் பெற உதவியது.



தமிழ் கேள்வி
**தி.செந்தில்வேல்**
(மூத்த ஊடகவியலாளர்)

அதேபோல், ஹெலிகாப்டர் விபத்தில், இந்த நாட்டின் ராணுவ தலைமை தளபதி மரணம் என்ற செய்தி கேட்டதும் உடனடியாக அனைத்து நிகழ்ச்சிகளையும் ரத்து செய்து விட்டு நீலகிரி சென்று அவருக்கு வீரவணக்கம் செலுத்தியதோடு தேவையான பணிகளை முன்னின்று செய்தவர் நம் முதல்வர் என்பதையும் மறந்து விடக்கூடாது.

ஏன்.. எதிர்க்கட்சியாக இருந்த காலகட்டத்திலும் கூட, சுனாமியால் தமிழகம் பாதிக்கப்பட்ட போது மிகுந்த அரசியல் நாகரீகத்தோடு தி.மு.க.வின் சார்பில், உடனடியாக நிவாரண நிதியை அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதாவை நேரில் சென்று சந்தித்து கொடுத்தவர் இன்றைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

இப்படி ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் தமிழக மக்களின் நலனுக்காக தொடர்ந்து இயங்கி வரும் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன் தினம் டெல்லி செல்கிறார். அங்கே பிரதமரைச் சந்தித்து பெருமழையால் தமிழகம் சந்தித்துள்ள சிக்கலை விளக்கிச் சொல்லி தமிழகத்திற்குத் தேவையான நிவாரண உதவியை உடனே வழங்குமாறு வலியுறுத்துகிறார்.

முன்னதாக, இந்தியா கூட்டணியின் சார்பில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்திலும் பங்கெடுக்கிறார். தமிழ்நாட்டிற்கான உரிமைகளைக் கேட்டுப் பெற அவர் டெல்லி புறப்படும் முன்பாகவே, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்டோரை தென் மாவட்டங்களுக்குச் செல்ல அறிவுறுத்தியதோடு, டெல்லிக்குச் சென்ற பின்பும் களத்தில் நிற்கும் அமைச்சர்கள் அதிகாரிகளோடு தொடர்ந்து அலைபேசி வழியே தொடர்பு கொண்டு, நிலமையைக் கேட்டறிந்து, ஆலோசனைகளையும் வழங்கி வந்ததையும் பார்த்தோம்.

இதோ டெல்லியில் இருந்து வந்ததும் தென் மாவட்டங்களுக்கு நேரில் சென்று மக்களின் துயர் துடைக்கும் பணிகளிலும் அவர் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்கிறார்.

இவ்வாறான சூழலில், "அவர் டெல்லிக்கு எப்படிச் செல்லலாம்?" என்று பா.ஜ.க. வினர் கேள்வி எழுப்புவது அநாகரிகத்தின் உச்சம். இவ்வாறு கேள்வி எழுப்ப பா.ஜ.க. தலைவர்களுக்கு எந்த தார்மீக உரிமையும் இல்லை.

காரணம், மணிப்பூர் பற்றி எரிந்தபோது, மோடி உள்ளிட்ட பா.ஜ.க. தலைவர்கள் அங்கு செல்லவில்லை என்பது மட்டுமல்லாமல், அப்போது தேசிய ஜனநாயகக் கூட்டணி எம்.பி.க்களுக்கு விருந்து கொடுத்து,"அவர்களோடு அந்த விருந்தில் பணியாரம், அடை, அவியலைசுவைத்துக் கொண்டிருந்தேன்" என்று பிரதமர் அவருடைய எக்ஸ் வலைதளத்தில் பதிவு செய்து மகிழ்ந்ததைப் பார்த்து நாட்டு மக்கள் அதிர்ச்சியில் உறைந்தனர்.

டெல்லியில் ஆண்டுக்கணக்கில் இந்த நாட்டின் விவசாயிகள் போராட்டம் நடத்தினர். வெயிலிலும், பனியிலும் அவர்கள் வாடி துன்புற்றபோதும், இந்த நாட்டின் பிரதமர் அவர்களைச் சந்திக்கவில்லை.மாறாக அந்த நேரத்தில் ஜெர்மனி உள்ளிட்ட நாடுகளில் அவர் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தார். இப்படிப்பட்ட பா.ஜ.க.விற்கு மக்களுடன் நிற்கும் தி.மு.க.வையும், அதன் தலைவரையும் நோக்கி கேள்விகேட்க என்ன தார்மீக உரிமை உள்ளது.?

குஜராத்தை கடந்த 2021ம் ஆண்டு, மே மாதம் 17ஆம் தேதி "டவ் தே" புயல் தாக்குகிறது. மே 19ஆம் தேதி உடனடியாக குஜராத்திற்கு நேரில் சென்று பார்வையிட்ட பிரதமர் மோடி, உடனடியாக முதற்கட்டமாக ரூபாய் 1000 கோடியை நிவாரண உதவிக்காக அறிவித்தார்.

குஜராத்திற்கும், உத்தரப்பிரதேசத்திற்கும் எளிதில் கிடைக்கும் நிதி தமிழ்நாட்டிற்கு போராடியும் கிடைப்பதில்லை..பிரதமரும் குஜராத்திற்கு உடனே நேரில் சென்றது போல் தமிழ்நாட்டிற்கு வந்து மக்களை நேரில் சந்திப்பதில்லை.

இப்படியான சூழலில் தமிழ்நாட்டில் சென்னை முதல் கன்னியாகுமரி வரை ஒரு சில பகுதிகளைத் தவிர பெரும்பாலான பகுதிகள் இயற்கைச் சீற்றங்களால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

மக்களுக்கு கொடுக்கும் நிவாரண நிதியைத் தாண்டி, சேதமடைந்த சாலைகளை புதுப்பிப்பது, மின் கம்பங்களை மாற்றுவது, பள்ளி, கல்லூரிகளை செப்பனிடுவது, பேருந்து உள்ளிட்ட பொதுப்போக்குவரத்து சாதனங்களை சரி செய்வது என்று இதற்கு ஏராளமான நிதி தேவைப்படும்.

இதை நேரில் கேட்டுப் பெற டெல்லி சென்ற முதல்வரை நோக்கி கேள்வி எழுப்பும் பா.ஜ.க.வினர் தமிழ்நாட்டிற்கும், தமிழக மக்களின் நலன்களுக்கும் எதிரானவர்கள் என்பதை மீண்டும் நிரூபித்துள்ளனர்.

பா.ஜ.க.தான் இப்படி எனில், திமுக எதிர்க்கட்சியாக இருந்தபோதும் தமிழ்நாட்டின் நலனுக்காக மாநில அரசு கேட்கும் நிதி உள்ளிட்டவற்றை உடனே விடுவிக்க ஒன்றிய அரசை வலியுறுத்தியதைப் பார்த்திருக்கிறோம்.

ஆனால், இன்றைய எடப்பாடி பழனிசாமி அ.தி.மு.க.வோ அவ்வாறு மாநில உரிமைக்காக எந்தக் குரலும் எழுப்ப அஞ்சி நடுங்கும் நிலையைப் பார்க்கும் போது, அண்ணாவின் பெயர் கொண்ட இயக்கத்திற்கு ஏற்பட்ட பரிதாப நிலையை எண்ணி வருத்தமே மிஞ்சுகிறது.

கொரோனா, இயற்கை பேரிடர்கள் என்று தொடர்ந்து வரும் சவால்களைத் தாண்டி தமிழ்நாடு பல்வேறு குறியீடுகளில் முதலிடம் பெற்று இந்தியாவிலேயே வளரச்சி பெற்ற மாநிலமாக தொடர்ந்து சாதித்து வருகிறது எனில், அதற்கு கடந்த இரண்டரை ஆண்டுகளில் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசின் அயராத உழைப்பே காரணம்.

இதை மடைமாற்றுவதற்கும், மக்கள் மனங்களில் குழப்பத்தை ஏற்படுத்தவும் நினைக்கும் பா.ஜ.க.வின் கனவு தமிழ்நாட்டில் எப்போதும் பகல் கனவுதான். அது ஒரு போதும் பலிக்காது.

### கேரளாவில் மீண்டும் வேகமெடுக்கும் கொரோனா பரவல்

# ஒரே நாளில் 300 பேர் பாதிப்பு - 3 பேர் பலி!

திருவனந்தபுரம், டிச. 22 -

கேரளாவில் கொரோனா பரவல் மீண்டும் வேகமெடுத்து, ஒரே நாளில் 300 பேருக்கு தொற்று உறுதியாகியிருப்பதுடன், 3 பேர் பலியாகியுள்ளனர்.

நாடு முழுவதும் கொரோனா பரவல் முடிவுக்கு வந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டு, ஊரடங்கு கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன.

இந்நிலையில் கொரோனா பரவல் குறித்து ஒன்றிய சுகாதார அமைச்சகம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

அதில் நாடு முழுவதும் புதிதாக 358 பேருக்கு கொரோனா உறுதியாகி இருப்பதாகவும், 6 பேர் சிகிச்சை பலனின்றி பலியாகி இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக கேரள மாநிலத்தில் 300 பேருக்கு கொரோனா இருப்பது கண்டறியப்பட்டு உள்ளதாகவும், 3 பேர் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளதாகவும், இதற்கடுத்து கர்நாடக மாநிலத்தில் 2 பேர் பலியாகி உள்ளதாகவும், மேலும் பஞ்சாபில் ஒருவர் பலியாகி உள்ளதாகவும் ஒன்றிய சுகாதார அமைச்சக அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதையும் சேர்த்து நாட்டில் கொரோனா பாதித்து சிகிச்சையில் இருப்போரின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 669 ஆக உயர்ந்துள்ளதாகவும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி.டி. தணிகாசலம்
### டிசம்பர் 22 (2009)



**குன்றத்தூரில் கழகம் வளரப் பாடுபட்ட செயல்வீரர்களில் இவரும் ஒருவர்.**

**1950ஆம் ஆண்டு காங்கிரஸ் அரசு விதித்த 144 தடை உத்திரவை மீறி பேச்சுரிமை, எழுத்துரிமை காக்க கூட்டம் நடத்தியதையொட்டி காவல்துறை இவரைக் கைது செய்தது.**

**கழகம் அறிவித்த இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்த்து போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்துகொண்டு சிறை சென்றவர்**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**






தூத்துக்குடியில் கனமழையால் பாதிக்கப்பட்ட பல்வேறு இடங்களில் – கழக துணைப் பொதுச் செயலாளரும் – நாடாளுமன்ற கழகக் குழுத் துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள், வெள்ள நீரில் இறங்கி, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கினார்.

### நெல்லை மாவட்டத்தில் மழை வெள்ள மீட்புப் பணிகளில்

# படகுகள் மூலம் 10 ஆயிரம் மக்களை மீட்ட மீனவர்களுக்குப் பாராட்டு - நன்றி!

## அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சந்தித்து தெரிவித்தார்!

நெல்லை, டிச.22-

நெல்லை மாவட்டத்தில் மழை வெள்ளத்தின் காரணமாக மீட்பு பணிகளில் படகுகள் மூலம் 10,000க்கும் மேற்பட்ட மக்களை மீட்ட மீனவர் பெருமக்களை நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பாளையங்கோட்டை வ.உ.சி. மைதானத்தில் நேரில் சந்தித்து பாராட்டி நன்றி தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்ததாவது:-

நெல்லை மாவட்டத்தில் மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள மக்களை மீட்பதற்கு உவரி, கூத்தங்குழி, இடிந்தகரை, கூட்டப்புளி மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த சின்னமுட்டம், தூத்தூர் ஆகிய மீனவ கிராமங்களில் இருந்து 72 பைபர் படகுகளுடன் 400 மீனவர்கள் உயிரினை துச்சமாக கருதி மீட்பு பணியில் ஈடுபட்டனர். இவர்கள் நெல்லை மாவட்டத்தில் உள்ள அதிக தண்ணீர் தேங்கிய நெல்லை சந்திப்பு, கொக்கிரகுளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சிந்து பூந்துறை, சி.என். கிராமம், குறுக்குத்துறை, நொச்சிகுளம் முன்னீ பள்ளம், சேரன்மகாதேவி, அம்பாசமுத்திரம் ஆகிய பகுதிகளில் வெளியேற முடியாமல் வீடுகளில் மேல் தளத்தில் தஞ்சம் அடைந்திருந்த 10,000க்கு மேற்பட்ட மக்களை பாதுகாப்பாக மீட்டு பாதுகாப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.

இப்பணிகளை தங்களுடைய உயிரை பணயம் வைத்து செய்த மீனவ பிரதிநிதிகளை தமிழ்நாடு அரசின் சார்பாக பாராட்டி நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**தேசிய பேரிடர் மீட்புக் குழுவுக்கு நன்றி!**

மேலும் தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் அருகில் ரயிலில் சிக்கிய பயணிகளுக்கு முதற்கட்டமாக ஹெலிகாப்டர் மூலம் குடிநீர், உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்களை பத்திரமாக மீட்பதற்கு தேசிய பேரிடர் மீட்பு குழு வந்துள்ளது. அவர்களையும் அமைச்சர் தங்கம் தென்னரசு பாராட்டி நன்றி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ., ஆ.பிரபா கரன், அமுல்சேவியர், காசிநாத பாண்டியன், பால முருகன், சவுந்தர பாண்டியன் மற்றும் மீனவ பிரதிநிதிகள் பலர் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், அப்துல்வஹாப் எம்.எல். ஏ. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், நெல்லை மத்திய மாவட்ட துணை செயலாளர் சுரேஷ், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெகதீஸ், ஒன்றிய செயலாளர் ஜோசப்பெல்சி, துணை மேயர் ராஜ், இளைஞரணி துணை அமைப்பாளர் ஜான்ரபீந்தர், உள்பட கழக நிர்வாகி கள் பலர் கலந்து கொண்டனர்.

### மழைவெள்ளம்: நிவாரணப் பொருட்களை கொண்டு செல்ல

# அரசு போக்குவரத்துக் கழக வாகனங்கள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல்!

பெரம்பலூர், டிச. 22 -

பெரம்பலூர் மாவட்டம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் உத்தரவின்படி கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு நிவாரணப் பொருட்களை கொண்டு செல்ல தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றது என போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல் தெரிவித்தார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை தொடங்கி வைக்கும் நிகழ்ச்சிகளில் பங்கேற்றபின் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்த தாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் கன்னியாகுமரி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் அதி கன மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு தடையின்றி போக்குவரத்து வசதி வழங்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்கள்.

**கட்டணமில்லா பேருந்து சேவை!**

அதனடிப்படையில், திருச்செந்தூர் கோவிலில் கடந்த மூன்று நாட்களாக தங்கி இருந்தவர்கள் வீடு திரும்புவதற்கு ஏதுவாக நேற்று (21.12.2023) முதல் கட்டணமில்லா பேருந்து வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திருச்செந்தூர், திருநெல்வேலி பாதை மழை வெள்ளத்தால் தடைபட்டுள்ளதால், பயணிகளை மாற்றுப்பாதையில் கன்னியாகுமரி வரை அழைத்து சென்று, பொது மக்கள் தாங்கள் செல்ல வேண்டிய இடத்திற்கு சென்று சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு ள்ளது.

இரண்டு நாட்களுக்கு முன்பாக பெய்த கனமழையின் போது பேருந்து ஒன்று திருநெல்வேலியில் இருந்து தூத்துக்குடி வந்த போதுபாலம் முழுமையாக மழை நீரால் மூழ்கியது. இதற்காக தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அவர்களை மீட்க வேண்டும் என சொன்னதன் அடிப்படையில், அவர்களுக்கும் மீட்கப்பட்டு அவர்களுக்கு கட்டணமில்லா பேருந்து ஏற்பாடு செய்து வழியனுப்பி வைக்கப்பட்டனர். கனமழையின் போது ஸ்ரீவைகுண் டம் ரயில் நிலையத்தில் மழை வெள்ளம் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரயிலில் இருந்த பயணிகளை மீட்டு அரசு போக்குவரத்து கழக பேருந்துகள் மூலம் மீட்டு அவர்கள் செல்லும் இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.



தி.மு.க. முன்னாள் பொதுச்செயலாளர் இனமான பேராசிரியர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் வைக்கப்பட்ட திருவுருவப் படத்திற்கு கழக சுற்றுச்சூழல் அணி மாநிலத் துணைச் செயலாளர் ஆர்.வினோத் காந்தி மலர் தூவி மரியாதை செலுத்தினார். இதில் மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே. சுந்தரமூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர்கள் துரைமஸ்தான், குமுதா குமார், மாவட்ட பொருளாளர் ஏ.வி.சாரதி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.சுந்தரம், வாலாஜா ஒன்றிய குழு தலைவர் சேஷாவெங்கட், நகர செயலாளர்பி.பூங்காவனம், நகர துணை செயலாளர் குமார், நகர பொருளாளர் அமீத், மேல்விஷாரம் நகர மன்ற தலைவர் அமீன், ஒன்றிய செயலாளர்கள் ஏ.வி.நந்தகுமார் எம்.சண்முகம் ஓச்சேரி பாலாஜி, அம்மூர் பேரூர் செயலாளர் பெரியசாமி, மாவட்ட சிறுபான்மையினர் பிரிவு அமைப்பாளர் இசட்.அப்துல்லா, பொதுக்குழு உறுப்பினர் பொன்னன், மாவட்ட பிரதிநிதிகள் கிருஷ்ணன் ரமேஷ், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் தியாகராஜன், சுற்றுச்சூழல் அணி மாவட்ட துணை அமைப்பாளர் சிவா, மாவட்ட நகர ஒன்றிய பேரூர் நிர்வாகிகள், கழகத்தினர் கலந்துகொண்டனர்.

### கூட்டுறவு சங்கங்களில் வசூல் ஆகாமல் நிலுவையிலுள்ள நீண்ட கால கடன்களை செலுத்தி உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில்

# சிறப்பு கடன் தீர்வுத் திட்டம் - 2023

## கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!

சென்னை, டிச.22-

கூட்டுறவு சங்கங்களில் வசூல் ஆகாமல் நிலுவையிலுள்ள, தவணை தவறிய பண்ணை சாராக் கடன்கள் மற்றும் இதர நீண்ட கால நிலுவை இனங்களுக்கு சிறப்பு கடன் தீர்வுத் திட்டம்-2023 அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தகவல் தெரிவித்துள்ளார்கள்.

இது குறித்து நேற்று முன்தினம் (20.12.2023) அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் பொதுமக்களுக்கு பல்வேறு வகையான கடன்களை வழங்கி வருகின்றன. கடன்தாரர்களின் வட்டிசுமையை குறைக்கவும், கூட்டுறவு நிறுவனங்களில் நீண்ட காலமாக வசூல் ஆகாமல் நிலுவையுள்ள தவணை தவறிய கடன்களை வசூல் செய்து இந்நிறுவனங்களின் நிதிநிலையைப் பலப்படுத்தவும் ஒரு சிறப்பு கடன் தீர்வுத்திட்டம், முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி செயல்படுத்தப்படும் என 2023-2024 கூட்டுறவுத் துறை மானியக்கோரிகையின் போது அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்த அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் அரசாணை (நிலை) எண்164, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை நாள் 13.12.2023 இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள், நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நகரக் கூட்டுறவு வங்கிகள், தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், பெரும்பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள், வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஆகியவற்றின் மூலம் வழங்கப்பட்டு வரும் சிறுவணிகக் கடன், தொழிற்கடன், வீட்டுவசதிக்கடன், சுய உதவிக் குழுக்கடன் உள்ளிட்ட பல்வேறு வகையான பண்ணை சாராக் கடன்களுக்கும், வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் வேளாண் விளைபொருட்களை கொள்முதல்/விற்பனை செய்த வகையில் உறுப்பினர்களிடமிருந்து வரவேண்டிய இனங்களுக்கும் இத்திட்டம் பொருந்தும்.

31.12.2022 இல் முழுமையாக தவணை தவறி நிலுவையில் உள்ள கடன்களுக்கு மட்டுமே இத்திட்டம் பொருந்தும். கடன் வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஒப்பந்தம் மேற்கொள்ளும் நாள் முடிய அசலுக்கு 9 சதவீதம் சாதாரண வட்டி வசூலிக்கப்படும். கூடுதல் வட்டி, அபராத வட்டி, இதர செலவினங்கள் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும்.



மேலும், இத்திட்டத்தின்படி கணக்கிடப்பட்ட நிலுவைத் தொகையில் 25 சதவீதத் தொகையை அரசாணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதத்திற்குள் செலுத்தி, வங்கி/சங்கத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டும். மீதமுள்ள 75 சதவீதத் தொகையை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட நாளிலிருந்து 6 மாத காலத்திற்குள் அதிகபட்சமாக 6 தவணைகளுக்குள் செலுத்த வேண்டும்.

இத்திட்டத்தின் மூலம், 4,73,067 உறுப்பினர்களுக்கு சுமார் ரூ.500/- கோடி அளவிற்கு கூடுதல் வட்டி, அபராத வட்டி மற்றும் இதர செலவினங்கள் சேர்த்து தள்ளுபடியாக கிடைக்கும். இதுமட்டுமின்றி கூட்டுறவு நிறுவனங்களுக்கு சுமார் ரூ.1,500/- கோடி திரும்ப கிடைக்க வாய்ப்பு உள்ளது. இவ்வாறு கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கரூர் வை. இரத்தினவேலு**
**டிசம்பர் 22 (2011)**



அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் கல்லூரியில் படிக்கின்ற காலத்திலேயே நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.

கல்லூரிப் படிப்பு முடித்து வெளியே வந்தவுடன் புகளூர் கிளைக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்றவர். பின்னர் கரூர் ஒன்றியப் பொறுப்பாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.

மும்முனைப் போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம், இரயில் மறியல் போராட்டம் உள்ளிட்ட கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

திருச்சி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் பெருந்தலைவராகப் பொறுப்பு வகித்தவர்.

2002ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில், இவருக்கு தலைவர் கலைஞர் அவர்கள் "பெரியார் விருது" வழங்கிச் சிறப்பித்தார்.

இவரது இறுதிக்காலம் வரை டி.என்.பி.எல். காகிதஆலை ஒப்பந்த தொ.மு.ச.வின் தலைவராக இருந்து தொழிலாளர் நலனுக்காகவும் போராடியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



கனமழை வெள்ளத்தின் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளை சீரமைப்பு செய்யும் பணிகள் நடைபெற்று வருவதின் முன்னேற்றங்கள் குறித்து அரசு அலுவலர்களுனடான ஆலோசனைக் கூட்டம் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக சிறு கூட்டரங்கில் நடைபெற்றது. உடன் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அரசு செயலாளர் இரா. செல்வராஜ், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், மாநகர காவல் ஆணையாளர் மகேஸ்வரி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிலம்பரசன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மைதீன்கான், அப்துல்வஹாப் எம்.எல்.ஏ.மேயர் சரவணன்,மாநகராட்சி ஆணையாளர்கள் தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ்(நெல்லை)சிவ கிருஷ்ணமூர்த்தி (ஈரோடு) உள்பட பலர் உள்ளனர்.

## திருப்பத்தூர் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையில்

# ரூ.56 கோடியில் புதிய கட்டடங்கள் !

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

திருப்பத்தூர், டிச. 22-

திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி ஒன்றியம் ஆத்தூர்குப்பம் ஊராட்சி ஜங்கலாபுரம் கிராமத்தில் துணை சுகாதார நிலைய புதிய கட்டடத்தை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று திறந்து வைத்தும், மீதமுள்ள ரூ.4.20 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு ள்ள 13 புதிய துணை சுகாதார நிலையங்களை காணொலி காட்சியில் திறந்து வைத்தும் சுகா தாரத்துறையினர் சார்பில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கரபாண்டியன், தலைமை வகித்தார்கள். மேலும் ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க.தேவராஜி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ. வில்வநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, பல்வேறு இடங்களில் புதிதாக கட்டப்பட்டுள்ள மருத்துவ துறை கட்டிடங்களை திறந்த வைக்கும் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக 14 துணை சுகாதார நிலைய கட்டிடங்கள் திறந்துவைக்கப்பட்டிருக்கின்றது. நேற்று மாலை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நான்கு புதிய கட்டிடங்களை திறந்து வைத்து, இராயக்கோட்டை என்ற பகுதியில் ; ரூபாய் 1 கோடியே 63 லட்சம் மதிப்பில் ஒரு கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டிற்கின்றோம். நேற்று முற்பகலில் தருமபுரி மாவட்டத்தில் நான்கு புதிய கட்டிடங்கள் திறந்து வைத்து, நான்கு கட்டிடங்களுக்கான அடிக்கல் நாட்டப் பட்டிருக்கிறது.

நேற்றைய முந்தைய நாள் சேலம் மாவட்டத்தில் 11 புதிய கட்டிடங்களை திறந்து வைத்து சேலம் மாவட்ட அரசு மருத்துவமனையில் புற்றுநோயை துல்லியமாக கண்டறிகின்ற 12 கோடி மதிப்பிலான ஸ்கேன் கருவியை இயக்க வைத்திருக்கின்றோம்.

மேலும் அரசு கல்லூரி மருத்துவமனையில் இருதய நோய் காண சிறப்பு மருத்துவ பிரிவை 6 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மகளிர்க்கு மகப்பேறுவதற்காக கேமரா வசதியுடன் கூடிய லேட்டராஸ்கோபிக் ரூபாய் 39 லட்சம் செலவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஆக சேலம் அரசு மருத்துவமனை வளாகத்தில் மட்டும் ரூபாய் 18.50 கொடி செலவில் அதிநவீன மருத்துவ உபகரணங்கள் தொடங்கி வைக்கப்பட்டது. இப்படி கடந்த இரண்டு நாட்களில் சேலம் கிருஷ்ணகிரி தர்மபுரி மாவட்டத்தில் தொடர்ந்து திருப்பத்தூர் மாவட்டத்திலும் ஏறத்தாழ 40 புதிய கட்டிடங்களை திறந்து வைக்கின்ற வாய்ப்பை முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கின்றார்.

எங்கே எல்லாம் கட்டிடங்கள்தேவைப்படுகிறதோ முன்னுரிமை அளிக்கப்பட்டு கட்டித் தரப்பட்டு வருகிறது. அந்த வகையில் திருப்பத்தூர் மாவட்டத்தில் இன்றைக்கு 14 கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது. ஆத்தூர்குப்பம் என்று சொல்லப்படுகின்ற இந்த இடத்தில் 30 இலட்சம் ரூபாய் செலவில் புதிய துணை சுகாதார நிலைய கட்டிடமும், குடி யானகுப்பம், மண்டலவாடி, லட்சுமி நகர், பெரியபேட்டை, லக்கியநாயக்கன்பட்டி, அகரம், குறும்ப கேரி, பாச்சல், பள்ளிப்பட்டு, ராவுத்தம்பட்டி, வடபுதுப்பட்டு, காமராஜபுரம், பெரியபேட்டை ஆக 14 இடங்களில் ரூபாய் 4 கோடியே 20 லட்சம் மதிப்பீட்டில் 14 புதிய மருத்துவ கட்டிடங்கள் தற்போது பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

மேலும் இன்றைய தினம் திருப்பத்தூர் மாவட்ட அரசு மருத்துவமனையில் ரூபாய் 8.25 கோடி மதிப்பிலான புதிய எம்ஆர்ஐ ஸ்கேன் கருவினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்த வைக்கப்பட்டிருக்கிறது. இந்த கருவியை பயன்படுத்திக் கொள்ள வேலூர் மாவட்ட தனியார் மருத்துவமனைக்கு செல்ல வேண்டி இருக்கின்றது. மேலும் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் தரை மற்றும் ஆறு தளங்களுடன் கூடிய ஒரு புதிய மருத்துவமனை கட்டிடம் ரூபாய் 23.64 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண் டிருக்கின்றது. அதேபோல் திருப்பத்தூர் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையில் ரூபாய் 56 கோடி செலவில் புதிய கட்டிடங்கள் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

மேலும் திருப்பத்தூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ரூபாய் ஒரு கோடியே 40 லட்சம் மதிப்பீட்டில் ஆரம்ப தலைமையிட மையம் என்கிற புதிய அமைப்பு உருவாக்கப்பட்டு கொண்டிருக்கின்றது. அதே மருத்துவமனையில் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் பொது சுகாதார ஆய்வக கட்டிடம் அமைக்கும் பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் ஆம்பூர் அரசு மருத்துவமனையில் தரைதளத்துடன் கூடிய ஆறு தளங்கள் கொண்ட மருத்துவமனை கட்டிடம் கட்டும் பணியும் ரூ.24 கோடியே 31 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இது மட்டுமல்லாமல் புதுப்பேட்டை, மாதனூர், கதிரம்பட்டி, வாணியம்பாடி, அத்தனாவூர் போன்ற பல்வேறு இடங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேவையான கட்டிடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதுவோடு மட்டுமல்லாமல் சிக்கனாகுப்பம், ஜெயபுரம், காமராஜபுரம், கூடப்பட்டு, பல்லவல்லி, புதூர் நாடு, சௌலூர், தாமலேரி முத்தூர், உதயேந்திரம், வெலகல்நத்தம், வெங்கிலி, பசிராபாத், பெரிய பேட்டை, கத்தாரி ஆலங்குப்பம், மூக்கனூர், நிலா ஊர், இமாம் தெரு, திருப்பத்தூர், காமராஜ நகர், நாராயணகுலம் சிவசக்தி நகர், வக்கனம்பட்டி, ஆகிய 34 இடங்களில் ரூபாய் 119 கோடியே 26 லட்சம் மதிப்பீட்டில் 34 புதிய கட்டிடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மிகப்பெரிய அளவில் மருத்துவத்துறையில் புரட்சி என்று கூறுகின்ற அளவிற்கு கட்டிடங்கள் ரூபாய் 13 கோடி செலவிலான கட்டிடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

திருப்பத்தூர் மாவட்டம் மருத்துவத்துறையில் தன்னிறைவு பெற்ற மாவட்டமாக மிக விரைவில் மாறுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது. நாட்றம்பள்ளி மருத்துவமனையில் டிஜிட்டல் எக்ஸ்ரே, சிடி ஸ்கேன் போன்ற வசதிகளை வழங்கிட வேண்டும் என அறிவுறுத்தி இருக்கிறோம். மிக விரைவில் அது வழங்கப்பட இருக்கிறது. மேலும் இரண்டு, மூன்று வாரத்திற்குள் 1021 மருத்துவர்களுக்கான புதிய இடங்கள் நிரப்பப்பட உள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அ வர்களின் திருகரங்களால் அவர்களுக்கு ஆணை வழங்கப்பட இருக்கிறது. இதன் மூலமாக எங்கே எல்லாம் மருத்துவ காலி பணியிடங்கள் இருக்கின்றதோ அவை எல்லாம் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் இன்று காலை 5 மணி அளவில் கிருஷ்ணகிரி மலை உச்சியில் இருக்கின்ற மலை கிராமத்தில் பழங்குடியினர் வசிக்கின்ற ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று அவர்களுடைய குறைகளை கேட்டு அறிந்து மருத்துவ கட்டமைப்புகள் குறித்து ஆய்வு அறிந்து அவர்களுக்கு விளக்கும்வ கையில் மக்களைத் தேடி மருத்துவம் என்ற திட்டத்தின் பயன்பாடுகள் குறித்து அவர்களுக்கு விளக்கி அங்கே ஒரு முகாமும் அமைத்து பயனாளிகளுக்கான மருந்து பெட்டகங்களையும் மகப்பேறு தாய்மார் களுக்கான ஊட்டச்சத்து பெட்டகங்களையும், பார்வை குறைபாடு உள்ள முதியோர்க ளுக்கு மூக்கு கண்ணாடிகளையும் வழங்கியிருக்கின்றேன்.

இது போன்ற இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட கிராமங்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றது, இதுவரையில் நான் 250 கிராமங்க ளுக்கு சென்று இருக்கின்றேன். என்னுடைய இலக்கு இன்னும் இரண்டு ஆண்டுகளில் 2000 கிராமங்களில் இருக்கின்ற பழங்குடியின மக்களையும் நேரடியாக சந்தித்து அவர்களுக்கு தேவையான மருத்துவ உதவிகளை செய்திட வேண்டும் என்பதுதான்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு மதி.இ.வளர்மதி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செல்வராசு, மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் என்.கே.ஆர். சூரியகுமார், துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் மரு.செந்தில், வட்டார மருத்துவ அலுவலர் மரு. செல்லமுத்து, உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு மருத்துவர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## வைகை அணையிலிருந்து

# 90 நாட்களுக்கு தண்ணீர் திறப்பு!

சென்னை, டிச.22-

பெரியாறு பாசனப் பகுதியில் உள்ள ஒருபோக பாசன நிலங்களுக்கும் மற்றும் திருமங்கலம் பிரதானக் கால்வாயின் கீழ் உள்ள ஒரு போக பாசன நிலங்களுக்கும் வைகை அணையிலிருந்து விநாடிக்கு 1130 கன அடி வீதம் 30 நாட்களுக்கு முழுமையாகவும், 60 நாட்களுக்கு முறை வைத்தும் மொத்தம் 90 நாட்களுக்கு 5858 மில்லியன் கன அடி தண்ணீரை 19.12.2023 முதல் வைகை அணையிலிருந்துநீர் இருப்புமற்றும்நீர்வரத்தைப் பொறுத்து தேவைக்கேற்ப, தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிட்டுள்ளது. இதன் மூலம் திண்டுக்கல், மதுரை சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் 1,05,002 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.



கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திற்கு தமிழ்நாடு சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் ஏற்பாட்டில் நீலகிரி மாவட்டம் உதகையிலிருந்து உணவுகள், காய்கறி மற்றும் அத்தியாவசிய வெள்ள நிவாரணப் பொருட்கள் நேற்று அனுப்பி வைக்கப்பட்டது. இதனை நீலகிரி மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி கீர்த்தி பிரியதர்ஷினி பொருட்களை ஏற்றி சென்ற லாரியை கொடியசைத்து வழி அனுப்பி வைத்தார்.



திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி ஒன்றியம், ஆத்தூர் குப்பம் ஊராட்சி, ஜங்கலாபுரம் துணை சுகாதார நிலையத்தில் நடைபெற்ற விழாவில் ரூ 4.20 கோடி மதிப்பீட்டில் 14 புதிய துணை சுகாதார நிலைய கட்டிடங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் டி.பாஸ்கர் பாண்டியன் தலைமையில், திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி முன்னிலையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை நிகழ்த்தினார்.

## “மக்களைத்தேடி மருத்துவம்”

# இந்திய அளவில் பாராட்டுக்குரிய திட்டமாக உள்ளது!

### திண்டுக்கல் சந்தை பேட்டையில் அமைச்சர் ஐ. பெரியசாமி பேச்சு



திண்டுக்கல், டிச.22-

மக்களைத்தேடி மருத்துவம் மற்றும் மருத்துவ முகாம் இந்திய அளவில் பாராட்டுக்குரிய திட்டமாக உள்ளது என்றும் ஊரக வளர்ச்சித்துறை மூலம் கிராமப்புறங்களில் புதிய நியாயவிலைக் கடைகள், புதிய அங்கன்வாடி மையங்கள், நாடக மேடைகள், சமுதாயகூடங்கள், பள்ளி வகுப்பறைகள் கட்டிக்கொடுப்பதால் கிராமங்கள் முன்னேற்றம் அடைந்து வருகிறது என்று திண்டுக்கல் சந்தை பேட்டையில் ரூ.30லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட துணை சுகாதார நிலையத்தை திறந்து வைத்து ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் பேசினார்.

திண்டுக்கல் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் ரூ.2.18 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற நலத்திட்டப்பணிகள் திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மொ.நா.பூங்கொடி, தலைமை தாங்கினார். திண்டுக் கல் மாநகராட்சி மேயர் இளமதி ஜோதி பிரகாஷ் முன்னிலை வகித்தார். திண்டுக்கல் மாநகராட்சி துணை மேயர் ராஜப்பா வரவேற்று பேசினார். போடிநாயக்கன்பட்டியில் ரூ.15லட்சத்தில் புதிய அங்கன்வாடி மையம், வி.எம். ஆர்.பட்டியில் ரூ.15லட்சம் மதிப்பில் மற்றும் சுக்கான்மேட்டில் ரூ.50லட்சம் மதிப்பில் சமுதாயகூடம், மரியநாதபுரத்தில் ரூ.15லட்சம் மதிப்பில் புதிய அங்கன்வாடி மையம், ஆர்.வி.நகரில் சமுதாய பொறுப்பு நிதியில் புதிய நியாயவிலைக்கடை,

முத்தழகுபட்டியில் ரூ.30லட்சம் மதிப்பில் துணை சுகாதார நிலையம், மற்றும் சமுதாய பொறுப்புணர்வு நிதியில் புதிய நியாயவிலைக்கடை, கருணாநிதி நகரில் அங்கன்வாடி மையம், சந்தை பேட்டையில் ரூ.30லட்சம் மதிப்பில் பொது சுகாதார வளாகம், மற்றும் சந்தை பேட்டையில் பிரதம மந்திரி ஜன்விகாஸ் காரியகிராம் திட்டத்தில் ரூ.30லட்சம் மதிப்பில் துணை சுகாதார நிலையத்தை திறந்து வைத்து கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டசத்து பெட்டகம் வழங்கி அவர்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங் களை அறிவித்து, செயல்படுத்தி, முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக, இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில் செயல்பட்டு, தலைசிறந்த முதலமைச்சராக திகழ்கிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு திட்டங்களை வகுத்து தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள்.

பொருளாதாரத்தில், தொழில் வளர்ச்சியில், சமூக நீதியில் தமிழகம் தழைத்தோங்க தமிழக அரசு திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது. குழந்தைகளுக்கு இளம் பருவத்தில் அடிப்படைக் கல்வி கிடைக்க வேண்டும் என்பதற்காக, சுகாதாரமான, காற்றோட்டமான வசதிகளுடன் கூடிய அங்கன்வாடி மையங்கள் கட்டப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் ஆரோக்கியத்துடனும், சுகாதாரமாகவும் வாழ வேண்டும் என்பதற்காகவும், அவர்களுக்கு தரமான மருத்துவ வசதி கிடைக்கவும், கடைக்கோடி மக்களுக்கும் அரசின் மருத்துவ வசதி சென்றடைய வேண்டும் என்பதற்காக தேவையான இடங்களில் துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

பொதுமக்கள் தங்கள் இல்ல விழாக்களை நடத்துவதற்காகவும், அவர்களின் பொருளாதார செலவை குறைத்திடும் வகையில் சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. பொதுசுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில், பொது மக்களுக்கு சுகாதாரமான சுற்றுச்சூழலை ஏற்படுத்தும் வகையில், வீடுகளில் தனிநபர் கழிப்பறை கட்ட இடவசதி இல்லாத பகுதிகளில், திறந்தவெளி கழிப்பிடங்களை தவிர்த்து, தொற்றுநோய் பரவலை தடுக்கும் வகையில் தேவைப்படும் இடங்களில் பொது சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

தமிழக முதல்வர் திராவிட மாடல் ஆட்சி நாயகர் முதல்வர் ஸ்டாலின்அவர்கள் ஆட்சியில் செயல்படுத்தி வரும் மக்களை தேடி மருத்துவம், மற்றும் மக்களை தேடி மருத்துவ முகாம், இந்திய அளவில் போற்றக்கூடிய திட்டமாக உள்ளது. ஊரக வளர்ச்சித் துறை சார்பாக கிராம ஊராட்சிகளில் புதிய நியாய விலைக் கடைகள், புதிய அங்கன்வாடி மையங்கள், நாடக மேடைகள், சமுதாயகூடங்கள், பள்ளி வகுப்பறைகள் கட்டிக்கொடுப்பதாலும் முதல்வரின் கிராமப்புற சாலைகள் திட்டம் மூலம் கிராம சாலைகள் மேம்பட்டு வருவதால் போக்குவரத்து வசதி மேம்பட்டு கிராமங்கள் வளர்ச்சி அடைந்து வருகிறது என்றார்.

நிகழ்ச்சியில் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையாளர் ரவிச்சந்திரன், செயற்பொறியாளர் சரவணக்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, நடராஜன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, துணைச்செயலாளர்கள் பிலால் உசேன், நாகராஜன், மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, மாநில வர்த்தகர் அணி இணைச்செயலாளர் ஜெயன், திண்டுக்கல் தெற்கு மண்டல தலைவர் அ.ஜான்பீட்டர், கிழக்கு பகுததி செயலாளர் ராஜேந்திரகுமார், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், பொதுக்குழு உறுப்பினர் அக்பர், திமுக நிர்வாகி அம்பைரவி, அகரம் பேரூராட்சிமன்ற தலைவர் நந்தகோபால், மாவட்ட திராவிடர் கழக தலைவர் வீரபாண்டி, மாவட்ட தி.மு.க. மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் கும்மம்பட்டி விவேகானந்தன், மாவட்ட வர்த்தகரணி அமைப்பாளர் பொன்முருகன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப்பட்டி அருண்,

மாநகராட்சி உதவி பொறியாளர் வி.சாமிநாதன், மாமன்ற உறுப்பினர்கள் பௌமிதா பர்வீன் பாரூக், நெல்லை சுபாஷ், ஆனந்தன், அருள்வாணி, பிரிட்டோ, ஜெயந்தி, அருண், ரம்யா, காயத்திரி ஜெயராம், கிருபாகரன், ஸ்டெல்லா மேரி, மற்றும் நகராட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள், அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர். முன்னதாக சந்தைப் பேட்டைக்கு வந்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு பூரண கும்ப மரியாதையுடன், மும்மதங்களை சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் மாலை மற்றும் சால்வை அணிவித்து வரவேற்றனர். தங்களின் கோரிக்கையை நிறை வேற்றிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு மனதார பாராட்டும் நன்றியும் தெரிவித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சேக் தாவூது
### டிசம்பர் 22 (1996)



**கல்லூரியில் படிக்கும் போதே தி.மு.க.வில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தவர். மாணவர்கள் சார்பில் நடைபெற்ற பல்வேறு போராட்டங்களைத் தலைமையேற்று நடத்தி சிறை சென்றவர்.**

**பிரிக்கப்படாத நெல்லை மாவட்டத்தின் மாணவர் அணி இணைச் செயலாளராகவும், நெல்லை மாவட்டம் பிரிக்கப்பட்ட பின்னர் நெல்லை மாவட்ட மாணவர் அணிச் செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**1991ஆம் ஆண்டு கழக ஆட்சி கலைக்கப்பட்டபோது நெல்லையில் மாபெரும் போராட்டத்தையும், அ.தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற ஊழலை எதிர்த்து தளபதி அவர்கள் தலைமையில் நெல்லையில் மாபெரும் போராட்டத்தையும் நடத்தியவர்.**

**“மாணவர் அணியின் கழகக் கண்மணியாக – என் மனங்கவர்ந்த மாணிக்க மணியாக – மாநிலத் துணை அமைப்பாளராக மாணவர் படைத் தளபதிகளில் ஒருவராகத் திகழ்ந்திட்ட தியாகச்சுடரே – கள்ளமிலாத் தம்பி! என்றும் என் நினைவில் வாழ்வாய்” என்று தலைவர் கலைஞர் அவர்கள், சேக் தாவூது மறைந்த போது இரங்கல் கவிதையில் குறிப்பிட்டுள்ளார்**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



அதிகனமழையினால் பாதிக்கப்பட்ட திருநெல்வேலி, முத்து மஹாலில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ள ஆலயங்குடி, அனுராதநல்லூர், முத்தாலம்குறிச்சி, பெந்தம்பள்ளி, சமத்துவபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 500 குடும்பங்களுக்கு, நேற்று முன்தினம் (20.12.2023) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, பால், பிஸ்கெட், அரிசி, பருப்பு, பாய், போர்வை மற்றும் தண்ணீர் பாட்டில் போன்ற நிவாரணப் பொருட்களை வழங்கினார்கள். இந்நிகழ்வின்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு தலைமைப் பொறியாளர் இரா.சந்திரசேகர், பொதுப்பணித்துறை சிறப்பு அலுவலர் இரா.விஸ்வநாத், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன் உடனிருந்தனர்.



நேற்று (21.12.2023) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆகியோர் சென்னை கலைவாணர் அரங்கில் செய்தி மக்கள் தொடர்புத் துறை மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, அப்போலோ மருத்துவமனையுடன் இணைந்து நடைபெற்ற தினசரி நாளிதழ்கள், செய்தி தொலைக்காட்சிகள் மற்றும் பருவ இதழ்களில் பணிபுரியும் ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள், முதன்மைச் செய்தியாளர்கள், செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப்பதிவாளர்கள் உள்ளிட்ட பத்திரிகையாளர்களுக்கு மாபெரும் சிறப்பு மருத்துவ பரிசோதனை முகாமினை தொடங்கி வைத்து, பார்வையிட்டார்கள்.

### தூத்துக்குடி மாவட்டம் – ஏரல் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

# கனிமொழி கருணாநிதி எம்.பி. படகில் சென்று நிவாரணம்!

## கிராமங்களுக்கும் நேரில் சென்று ஆறுதல் தெரிவித்தார்!

*தூத்துக்குடி, டிச. 22 -*

ஏரல் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு படகிலும் பைக்கிலும் சென்று நிவாரணப் பணிகளில் ஈடுபட்டார் கனிமொழி கருணாநிதி எம்.பி. தூத்துக்குடி உள்ளிட்ட தென்மாவட்டங்களில் பெய்த அதிகன மழையால், மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்து, மக்களின் இயல்பு வாழ்க்கைப் பாதித்தது.

இந்த நிலையில், வெள்ள பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளுக்கு தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் தொடர்ந்து மீட்புப்பணி மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார்.

நேற்று முன்தினம் (20.12.2023) ஏரல் பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை தேசிய பேரிடர் மீட்புப் படையினருடன் இணைந்து படகில் பயணித்து, மக்களை சந்தித்து அவர்களின் தேவைகளை கேட்டு அறிந்தார்.

மேலும், வாக்கி டாக்கி மூலம் பிரச்சினையின் தீவிரத்தை அரசு அதிகாரிகளுக்கு உணர்த்தி பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உணவு, தண்ணீர், பால், பிஸ்கட், குழந்தைகளுக்கான பால் பவுடர் மற்றும் சமைக்கத் தேவைப்படும் அரிசி, பருப்பு, காய்கறிகள் உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் வேண்டும் என்று கோரினார்.

அதனைத் தொடர்ந்து, மீட்புப் படையினர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கோரிய நிவாரணப் பொருட்களைப் படகில் கொண்டு சேர்த்தனர்.

பின்னர், கனிமொழி கருணாநிதி அவர்கள் மக்கள் கோரிய உணவு, தண்ணீர், பால் உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கி, வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கு ஆறுதல் தெரிவித்தார். ஏரல் சுற்றியுள்ள கிராமங்களுக்கு டூவீலரில் சென்று நிவாரணப் பணிகளில் ஈடுபட்டார்.

# பெரியாறு அணையிலிருந்து 90 நாட்களுக்கு தண்ணீர் திறப்பு!

*சென்னை, டிச. 22 -*

தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கிலுள்ள, பி.டி.ஆர். மற்றும் தந்தை பெரியார் வாய்க்காலின் கீழ் உள்ள ஒரு போக பாசன நிலங்களுக்கு பெரியாறு அணையிலிருந்து விநாடிக்கு 100 கன அடி வீதம் 30 நாட்களுக்கு முழுமையாகவும், 60 நாட்களுக்கு முறை வைத்தும் மொத்தம் 90 நாட்களுக்கு 518 மில்லியன் கனஅடி தண்ணீரை 19.12.2023 முதல் திறந்துவிட அரசு ஆணையிட்டுள்ளது.

இதன் மூலம் தேனி மாவட்டத்தில் 5146 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

### திருவண்ணாமலை மாவட்டக் கழகம் சார்பில்

# இனமானப் பேராசிரியர் பிறந்த நாள் விழா!

## திருவுருவப் படத்திற்கு - கு.பிச்சாண்டி மாலை அணிவித்து மரியாதை!

*திருவண்ணாமலை, டிச. 22 -*

திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில் இனமானப் பேராசிரியர் அவர்களின் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. அவரது திருவுருவப் படத்திற்கு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி மற்றும் கழக முன்னோடிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

19.12.2023 செவ்வாய்க்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோவிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், கழக முன்னாள் பொதுச் செயலாளர் இனமான பேராசிரியர் அவர்களின் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு மாவட்ட அவை தலைவர் த.வேணுகோபால் தலைமை வகித்தார்.

கழக மருத்துவரணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்டப் பொருளாளர் எஸ். பன்னீர்செல்வம், மாவட்ட துணைச் செயலாளர் பிரியா விஜயரங்கன் ஆகியோர் முன்னிலை வகித்தார்.

நகரச் செயலாளர் ப. கார்த்திவேல்மாறன் அனைவரையும் வரவேற்றார்.

பிறந்த நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி மற்றும் கழக முன்னோடிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியில் மாவட்ட அமைப்பாளர்கள், டி.வி. எம்.நேரு, இரா.கார்த்திகேயன், கு.கணேஷ், பாலமுரளிகிருஷ்ண, ஒன்றியச் செயலாளர் பெ.கோவிந்தன், நகர மன்றத் தலைவர் நிர்மலா வேல்மாறன், பேரூர்ச் செயலாளர். சி.கே.அன்பு, நகர மன்ற துணைத் தலைவர் சு.ராஜாங்கம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.கண்ணதாசன், நகர நிர்வாகிகள் சி.சண்முகம், மு.கருணாமூர்த்தி, ஜீவரேகா விஜயராஜ், ந.சீனுவாசன், மாவட்ட பிரதிநிதிகள் கோல்டு எஸ். பிரபு, ஹக்கிம் சேட், மாவட்ட துணை அமைப்பாளர்கள் எஸ்.சமயராஜ், ஏ.எம்.பாஷா, ராயல் தியாகு, சாதிக் பாஷா, ஆர். வெங்கடேஷ், ஒன்றிய பொருளாளர் மண்டி எழுமலை, அய்யம்பாளையம் திருநாவுக்கரசு, மற்றும் ஜாகீர் பாலகிருஷ்ணன், சீ.ரகுபதி, ஹிமாத் பாஷா, அ.சபரி உட்பட ஏராலமானோர் கலந்து கொண்டனர்.




# திராவிட சினிமா

37

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில், திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

படங்கள் உதவி : ஞானம்







# எதையும் தாங்கும் இதயம்: அண்ணாவின் இறுதித் திரைப்படம்!

■ **வீ.மா.ச.சுபகுணராஜன்**

சென்னையின் கடற்கரையில் வங்கக் கடல் தாலாட்டத் துயிலும் நம் அண்ணாவின் நினைவிடத்தில் உள்ள பலகையில் **'எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது'** என்ற வாசகத்தைக் காண முடியும்.

நமது அரசியல் சிந்தனைகளின் ஊற்றான பேராசான் அண்ணா, அனைவரையும் அரவணைத்து வழி நடத்தும் பண்புக்குப் பாத்திரமானவர். அந்தச் செயல் எளிதானதில்லை. எத்தனை காயங்களை, வலிகளைச் சுமந்து இந்த இயக்கத்தைப் பதினெட்டே ஆண்டுகளில், இந்தியாவின் முதல் மாநிலக் கட்சியாக, ஆட்சிக்கட்டிலில் அமர்த்தினார் என்பது வரலாறு.



ஆனால், அதே தலைப்புடன் 1962-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் வெளியான திரைப்படம்தான் அண்ணா அவர்கள் நேரடியாகப் பங்காற்றிய கடைசித் தமிழ்த் திரைப்படம் என்பது ஆச்சர்யத்துக்குரியது. ஆம், **'எதையும் தாங்கும் இதயம்' கொண்ட தலைவரின் நினைவைப் போற்றும் இன்னொரு மைல்கல்.**

## தேர்தல் தோல்விக்கு மருந்து

1962-ஆம் ஆண்டின் பிப்ரவரி மாத இறுதியில் இந்தியப் பொதுத்தேர்தல் நடந்து முடிவுகள் வெளிவந்தன. திராவிட முன்னேற்றக் கழகம் 50 சட்டமன்றத் தொகுதிகளிலும், ஏழு நாடாளுமன்றத் தொகுதியிலும் வெற்றிபெற்று காங்கிரஸ் கட்சியை அதிர வைத்தது. ஆனால், அண்ணா அவர்கள் காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதியில் தோல்வியுற்றார். அந்த மனநிலைக்கு ஆறுதல் அளிக்கும் வகையில், வெளியானது இந்தத் திரைப்படம்.

தோல்வியில் துவண்டு போவதில்லையே இயக்கம். தோல்வியைப் புறந்தள்ளி, அந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அண்ணா நாடாளுமன்ற மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நான் 'திராவிட இனத்தைச் சேர்ந்தவன் என அறிவித்துக் கொள்வதில் பெருமை கொள்கிறேன்' என அறைகூவல் விடுத்து நாடாளுமன்றத்தையும், இந்தியத் துணைக்கண்டத்தையும் அதிர வைத்தார்.

அண்ணாவின் இறுதிப்பட நாயகனும் (எஸ்.எஸ்.ஆர்) குழந்தைப் பருவந்தொட்டு ஆதரவின்றி அல்லலுற்று, கூரைகளற்ற தெருக்களிலேயே வளர்பவன். அரைக்கால் டவுசரோடு முழுநீளத் திரைப்படத்தில் வலம் வந்த முதல் நாயகன் இவரே..!

## இரண்டு நாயகர்கள்

இல்லாமையின் இயல்பிலேயே அன்பும் இரக்கமும் நிறைவதற்கான இடஒதுக்கீடு இருப்பதை மறுப்பதற்கில்லை. மாடசாமியின் 'இல்லாமை' பொருளாதாரம் மட்டுமில்லை, அன்பும் ஆதரவும்தான். வஞ்சக தனவந்தனால் ஏமாற்றப்பட்ட தாய், பிள்ளையிடமிருந்தும் பிரிக்கப்படுகிறாள். அறிந்துகொண்டே நிராகரிக்கிறான், செல்வச் சீமானான அப்பன்.

திரைப்படத்தில் இரண்டு நாயகர்கள் (இன்னொருவர் அண்ணாவின் பிரியத்துக்குரிய ஆஸ்தான நாயகன் கே.ஆர்.ராமசாமி. செல்வச் சீமானின் நல்ல மனம் கொண்ட பிள்ளை) உண்டெனினும் திரைவெளியை ஆக்கிரமித்து நிற்கும் ஆளுமை நடிகவேள் எம்.ஆர்.ராதாதான். இறுதியில், அனைவரும் இணைவதுதான் கதைக்களம்.

## சமூக விமர்சன வசனங்கள்

அண்ணாவின் திரைப்படங்களில் காட்சிகளின் ஒவ்வொரு இழையிலும் பண்பாடு, சமூக ஏற்றத்தாழ்வு குறித்த விமர்சனங்களே நிறைந்திருக்கும். ராதா மற்றும் எஸ்.எஸ்.ஆர். உரையாடல்களில் அன்றைய சமூகப்பார்வை, அரசியல் ஆகியவை இல்லாமல் ஒற்றை வார்த்தை கூட கிடையாது. உழைத்து முன்னேற வேண்டும் என்று சொல்லும் உதவியாளரிடம் ராதா, 'உலகத்தில யாராவது உழைச்சு முன்னேறுனது உண்டா? உழைக்கலாம். ஆனால், முன்னேற முடியாது' என்கிறார். உழைப்பிற்கும் உபரிக்குமான உறவை எளிமையான வார்த்தைகளில் பேசுகிறது அண்ணாவின் வரிகள்.

நாயகனை 'அவர் ரொம்ப நல்லவரப்பா' என்கிறாள். 'ஓ... அதனாலதான் ரிக்ஷா இழுக்கிறான் போல' என வருகிறது ராதாவின் பதில். தெருவில் படுத்திருக்கும் நாயகனை எழுப்பும் காவலர் சொல்கிறார், 'தெருவுல படுக்கிறது சட்டப்படி குற்றம். எழுந்து போ' என்று, இவனோ 'எனக்கு வீடே இல்லையே' என்கிறான். காவலர் 'அதற்கு நான் என்ன செய்யுறது' என்றபடி நகர்கிறார். இன்னொரு காட்சியில் தெருத் திண்ணையொன்றில் படுக்கும்போது, ஏற்கெனவே, அங்கே வாடிக்கையாகப் படுக்கும் குடும்பத்துக்காக இடம் விட வேண்டியதாகிறது.



அநேகமான காட்சிகள் தெருவோரங்களில், சேரிகளில் மட்டுமே. எதிர்நிலையில் மாளிகை போன்ற இல்லங்கள். ராதா, மகள் தேன்மொழிக்கு அறிவுரை சொல்கிறார், 'இங்க பாரு, லேடிஸ் கிளப், டீ பார்ட்டின்னா போ, அசிங்கமா சேரிக்கு சேவை செய்யப் போறது, அங்கே இருக்கிற ரவுடிப்பயல்களோட பேசறதெல்லாம் வேண்டாம்'.

## அண்ணாவின் 'பாஞ்சாலி சபதம்'

அண்ணாவுக்குத் தெருக்கூத்து மீது மிகுந்த ஆர்வமுண்டு என்ற செய்தி உண்டு. இந்தத் திரைப்படத்தில் தெருக்கூத்தில் துச்சாதனன் பாஞ்சாலியை துரியோதனன் சபைக்கு இழுத்துச் செல்லும் காட்சியை, கூத்தின் மொழியில், அதாவது சென்னை, வட ஆற்காடு மொழிநடையில் அமைத்திருப்பார். அண்ணா வட்டார வழக்கில் எழுதிய கூத்தின் பிரதி அபூர்வமானது என்பதில் ஐயமில்லை. அதிலும் எம்.ஆர்.ராதா, 'சவால் வீராயி' மனோரமா ஆகியோர் பங்கேற்கும் நகைச் சுவையான கூத்து கிண்டலானதும் கூட.

'என்னயக் கேட்டுக்கினா சீட்டாடுனாங்க' என வர மறுக்கிறாள் பாஞ்சாலி. 'கதிகெட்ட அண்ணியே கேட்டியா... என்னைக் கருவாட்டுத் துண்டுன்னு நெனச்சியா' இது துரியன். 'மதிகெட்ட மைத்துனனே வந்தியா... என்ன இஸ்த்துக்கினு போவ நெனச்சீயா' இது பாஞ்சாலி.

இதில் 'பாஞ்சாலியின் சபதம்' என்னவெனில், யாராலும் தன்னைக் கையைப் பிடித்து இழுத்துச் செல்ல முடியாது என்பதே. வேறுவழியின்றி, துச்சாதனன், 'அவையோர்களே, ஆம்பள நடிகனுங்கன்னா கூச்சல் போடுவீங்களே, கொஞ்சம் இந்த அண்ணியையும் கதைப்படி நடிக்கும்படி கண்டித்து அனுப்புங்கள்' என்பதே.

திராவிடச் சினிமாக்களின் அடிப்படையான பண்பே, சமூக விமர்சனக் கருத்துகளையும் அரசியலையும் தினசரி வாழ்வின் பகுதியாக்குவது தான். அது மனித உரிமை, சுயாட்சி, மனிதாபிமானம், அரசியல் கொள்கை, பகுத்தறிவுச் சிந்தனை எதுவானாலும் 'துருத்திக் கொண்டு நிற்பவை அல்ல. இவற்றைப் பிரச்சாரங்கள் என வயிற்றிலடித்துக் கொண்டவர்கள் சித்தரித்த வாழ்வு, சனாதனத்தின் எச்சங்களாக இருந்தன.

மாற்றத்துக்கான விழைவு, தூண்டப்படாத காட்சிப்படுத்தல் விதி வசம் எனும் விபரீதத்துக்கே வழிவகுக்கும். மறுபுறம் ஆர்ப்பரித்துக் கூட்டம் கூட்டி, தீவட்டி ஏந்திவிட்டால், மாற்றம் விளைந்து விடுமென்ற முதிரா சிந்தனை உவப்பானதல்ல. திராவிடம், வெகுமக்கள் இயக்கம் என்பதால் 'எல்லாம் விதிவசம்' எனும் தோல்வி மனப்பான்மையையோ, எதிர்நிலையில், 'வன்முறையே மாற்றத்திற்கான வழி' என்பதையோ ஒரு போதும் ஏற்ற இயக்கமன்று. எதையும் தாங்குவோம், ஆனால் அடுத்த நகர்வை ஒருபோதும் கைவிட மாட்டோம். அதுதான் திராவிடம். அதுதான் அண்ணாவின் அரசியல் சித்தாந்தம்.

...படம் விரியும்

## எத்தனை சிறிய இடம்..!

பாராளுமன்றத்தில் கண்ணீர்ப்புகை குண்டு வீசிய நிகழ்வைப் பற்றி விவாதம் நடத்தத் திராணியற்ற பா.ஜ.க. அரசு, அது தொடர்பாக, கேள்வி கேட்ட எம்.பி.க்களை எல்லாம் இடைநீக்கம் செய்தது.

அந்தப் பிரச்சினை இப்போது பூதாகரமாக எழும்ப, இப்போது துணை ஜனாதிபதியைக் கிண்டல் செய்கிறார்கள் என்று பிரச்சினையைத் திசை மாற்றுகிறது.

அடுத்த சில நாட்களில், பா.ஜ.க. அரசு கொண்டு வந்த சில மசோதாக்கள் பற்றிக் கேள்வி கேட்ட எதிர்க் கட்சி எம்.பி.க்கள் சிலரையும் இடைநீக்கம் செய்திருக்கிறது.

தந்தை பெரியாரின் கருத்துகளைச் சொன்னால், இடைநீக்கம், கேள்வி கேட்டால் இடைநீக்கம் எனத் தொட்டதற்கு எல்லாம் எதிர்க்கட்சி எம்.பி.க்களை இடைநீக்கம் செய்துவிட்டு, பாராளுமன்றக் கூட்டத் தொடரை எப்படியாவது நடத்தி முடித்துவிட முயற்சிக்கிறது பா.ஜ.க.

இவை எல்லாமே பாராளுமன்றம் ஒரு சர்க்கஸ் கூடமாக மாறிவிட்டிருக்கிறது என்பதையே காட்டுகின்றன. பழைய பாராளுமன்றத்தில் போதிய இட வசதி இல்லை என்று, புதிய பாராளுமன்றம் கட்டப்பட்டது. இங்கு இட வசதி நிறைய இருக்கிறது. ஆனால், ஆட்சியில் இருப்ப வர்களின் அறிவும் மனமும் தான் சுருங்கி இருக்கின்றன.

## :ப்ளாஷ்பேக்





பொன்மலை குமாரசாமி

### ரயில் நிலையத்தில் பொன்னாடை!

1992-ஆம் ஆண்டு கோவை மாவட்டத்தில் பொதுக்கூட்டம் ஒன்றில் பங்கேற்பதற்காக கழகப் பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர் அவர்கள், நீலகிரி விரைவு ரயிலில் கோவை ரயில் நிலையத்துக்கு வருகை தந்தார். காலை 4 மணிக்கு ரயில் நிலையத்துக்கு வந்த, அவரை வரவேற்க கிணத்துக்கடவிலிருந்து அதிகாலை 2 மணிக்கே கிளம்பி, நிலையத்தை அடைந்தோம். பேராசிரியர் அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்து மகிழ்ந்த நிகழ்ச்சி, என் வாழ்க்கையில் மறக்க முடியாத தருணம். அப்போது பொங்கலூர் நா.பழனிசாமி, கோவை ராமநாதன் ஆகியோர் உடனிருந்தார்கள்.

**-பொன்மலை குமாரசாமி,**
**முன்னாள் மாவட்டப் பிரதிநிதி,**
**கோவை தெற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண்: 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### அண்ணாவின் மடல்!

**1955-ஆம் ஆண்டு மே 8-ஆம் தேதி முதல் பேரறிஞர் அண்ணா 'திராவிட நாடு' ஏட்டில் 'தம்பிக்கு' என்ற தலைப்பில் மடல்களை எழுதி வந்தார். அடுத்த 15 ஆண்டுகளில் மொத்தம் 290 கடிதங்களை அண்ணா எழுதினார். அதேபோல அவர் 'ஹோம்லேண்ட்' மற்றும் 'ஹோம் ரூல்' ஆங்கில வார ஏடுகளில் 1957 மற்றும் 1960 ஆம் ஆண்டுகளில் ஆங்கிலத்திலும் அந்த மடல்களை எழுதினார். தேர்தல் பாதையில் அடைந்த முன்னேற்றம், ஆட்சியில் அமர்ந்தது என தி.மு.க வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் காலக்கண்ணாடிகளாக அந்தக் கடிதங்கள் திகழ்கின்றன.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

336




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131